வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்



மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 வைகாசி திங்கள் 28-ம் நாள் (10—6—1962) ஞாயிற்றுக்கிழமை துல்ஹஜ் 6 | இதழ் 2

# ஆங்கிலத்தில் செய்த சட்டங்களுக்கு ஆபத்து

## உயர் நீதிமன்றத்தில் புகார் செய்யமுன்பு தற்காப்பு மசோதா

## அரசாங்கத்தின் அவசர நடவடிக்கை

(சுதந்திரன் நிருபர்)

1960 டிசம்பர் 31-ந் திகதி சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்கிய பின்னர் இதுவரை ஜனப் பிரதிநிதிகள் சபையிலும், செனட் சபையிலும் ஆங்கிலத்தில் சமர்ப்பித்துச் சட்டமாக்கப்பட்ட மசோதாக்கள், திருத்த மசோதாக்கள், விதிகள் அனைத்தும் செல்லுபடியாகாதென பிரபல வழக்கறிஞர்கள் சிலரும், வெலிமட முன்னாள் எம். பி. திரு. கே. எம். பி. ராஜரத்னவும் உயர் நீதிமன்றத்தில் வழக்காடப் போவதாக "சுதந்திர"னுக்குத் தகவல் கிடைத்துள்ளது. செல்லுபடியாகாதெனக் கூறப்படும் சட்டங்களில் 'சதி' சம்பந்தமான சட்டமும் ஒன்றாகும்.

## "சதி" சட்டமும் செல்லாது?

இந்தத் தகவல் அரசாங்கத்திற்கு முன்கூட்டியே கிடைத்து விட்டதால் மேற்கண்ட சட்டங்களையும் 'சதி'ச் சட்டத்தையும், 1960 டிசம்பர் 31-ந் திகதிக்குப் பின்னர் கவர்னர் ஜெனரலால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட பிரகடனங்களையும் சட்டப்படி செல்லுபடியாக்கும் ஒரு மசோதாவை அரசாங்கம் அவசர அவசரமாகத் தயாரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. அத்தோடு, இனிமேல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எல்லா மசோதாக்களும் சிங்களத்திலேயே சமர்ப்பிப்பதென்றும் அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது

ஆங்கிலத்தில் மசோதாக்கள் தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, சட்டமாக்கப்பட்ட சட்டங்களைச் செல்லுபடியாக்கும் இப்புதிய மசோதாவை நீதி மந்திரி திரு. சாம். பி. சி. பர்னாந்து தான் தயாரித்திருக்கிறாராம்.

'சதி' சம்பந்தமான சட்டம் செல்லுபடியாகுமா? என்ற பிரச்னை கிளம்புவதற்கு இடமளிக்காமலிருப்பதற்காக அரசாங்கம் புதிய மசோதாவைச் சட்டமாக்கிவிடத் துடித்துக் கொண்டிருக்கிறதெனக் கூறப்படுகிறது. சதி வழக்கு விசாரணை ஆரம்பம், அடுத்த மாதம்வரை ஒத்திப்போடப்பட்டிருக்கிறது. அந்த விசாரணை ஆரம்பமாகு முன்பு இந்தப் புதிய மசோதாவை இருசபைகளிலும் நிறைவேற்றிச் சட்டமாக்கிவிடவேண்டுமென்பது தான் அரசாங்கத்தின் முயற்சியாம்.

இப்புதிய மசோதா சட்டமாகிவிட்டால், ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட சட்டங்களைப் பற்றி உயர் நீதி மன்றத்தில் புகார் கொண்டுவர முடியாதென்று அரசாங்கம் கருதுகிறது.

## "ஹர்த்தால் அரசாங்கத்திற்கு ஒரு சவால்"

"எங்களுக்கு நீதி கிடைக்கும் வரையில் சத்தியத்தின் அடிப்படையில் நின்று வழுவாமல் எத்தனை போராட்டங்களையும் நடத்தியே தீருவோம். அடக்குமுறைக்கு நாங்கள் அஞ்சமாட்டோம் என்பதை தமிழ் பேசும் மக்கள், தங்கள் சாத்வீகப் போராட்டமான இந்த ஹர்த்தால் மூலம், ஆட்சியாளருக்கும், உலகத்தாருக்கும் காட்டிவிட்டனர்."

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் துக்கதினத்தன்று நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:— நாம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் எதுவும் உடன் பலனளிக்கவில்லை என்று குறை கூறுகிறார்கள். சுதந்திரப் போராட்டம் எந்த ஒரு நாட்டிலும் குறுகிய காலத்தில் பலனளித்தது கிடையாது. பலவித துன்பங்களைக் கண்டும், துணிவோடு போராடினால்தான் இலட்சியம் கைகூடும் தமிழ் பேசும் மக்களை அடக்குமுறைகளை வீசி அடிமைப்படுத்திவிட்டதாக அரசாங்கம் நம்புகிறது. இன்று அமைதியாக நடைபெற்ற ஹர்த்தால், தமிழ் பேசும் மக்கள் அடங்கி ஒடுங்கிவிடவில்லை என்பதை தெள்ளத் தெளிவாகக் காட்டிவிட்டதோடல்லாமல் இது அரசாங்கத்துக்கும் ஒரு சவாலாகும்.

திருவாளர்கள். அ. அமிர்தலிங்கம், எம். பி. நடராசா, எம். பாலசுந்தரம், எம். பி. ஆகியோரும் கூட்டத்தில் பேசினர்.

கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியிலிருந்து ஆரம்பமான ஊர்வலம் மாலையில் யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தை அடைந்தது. ஊர்வலத்தில் கறுப்புக் கொடிகள் கொண்டு செல்லப்பட்டன.

## அடக்கு முறைக்கு அஞ்சி அடங்கிவிடவில்லை

### வட கிழக்கில் ஹர்த்தால் ஒரு வெற்றி

ராணுவத்தைக் கொண்டும், பொலிசுப் படையைக் காட்டியும் எமது இன உணர்ச்சியை- விடுதலை வேட்கையைத் தடுத்துவிட முடியாது, என்று ஆட்சியாளருக்குச் சவால் விடுவது போல் இம்முறை துக்க தினம் இருந்தது. யாழ்ப்பாண நகரம் சோபை இழந்து காணப்பட்டது. தெருக்கள் வெறிச் சென்றிருந்தன. அங்காங்கே கட்டப்பட்ட கறுப்புக் கொடிகளில் தங்கள் கைவரிசையைக் காட்டப் பொலிசார் மறக்கவில்லை இரவு வேளைகளில் கட்டப்பட்ட அனேக கொடிகள், பொழுது புலர்வதற்கு முன்னர் மறைந்த மாய வித்தையைச் செய்தவர்கள் பொலிசாரே!

யாழ்ப்பாணக் குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலும். ஹர்த்தாலன்று துக்கம் அனுட்டிக்கப் பட்டது. சில பாடசாலைகளில் மாணவர்களின் தொகை குறைவாகக் காணப்பட்டன. பெரும்பாலான பாடசாலைகள் மூடப்பட்டன.

#### திருமலை

கடைகளில் பெரும்பாலானவை பூட்டப்பட்டிருந்தன. அங்காங்கே கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. காளி கோயிலில் விசேட பிரார்த்தனை ஒழுங்குகளை திருமலை பாராளுமன்ற உறுப்பினர் ஏற்பாடு செய்திருந்தார். மாலையில் காளி கோயில் முன்றிலில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைமை வகித்துப் பேசிய திருமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு. என். ஆர். இராசவரோதயம்: "அகிம்சை என்னும் ஆயுதம் அணுக் குண்டை விடப் பயங்கரமானது. அந்த ஆயுதத்தைப் பாவிக்கும் எமக்கு என்றும் தோல்வி கிடையாது" என்று கூறினார்.

#### மட்டக்களப்பு

தமிழரசுக் கட்சியின் வேண்டுதலுக்கிணங்க ஹர்த்தால் அனுஷ்டிக்கும் முகமாக, மட்டக்களப்பு பட்டனப் பகுதியில் உள்ள பல கடைகளைப் பூட்டியிருந்தனர்.

மட்டக்களப்பில் உள்ள மூன்று தியேட்டர்களிலும் படக் காட்சிகள் நடைபெறவில்லை. மட்டக்களப்பு தமிழரசுக் கட்சிக் காரியாலத்திலும் வேறு பல இடங்களிலும் கறுப்புக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன.

#### பட்டிருப்பு

பட்டிருப்புத் தொகுதியிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. களுவாஞ்சிக் குடியில் பெருப்பாலான கடைகள் பூட்டப்பட்டிருந்தன. பாடசாலைகளில் வரவு மிக மிகக் குறைவாகவே காணப்பட்டது. ஆலயங்களில் விசேஷ பூசைகளுக்கான ஏற்பாடுகளை திரு. எஸ். எம். இராசமாணிக்கம் செய்திருந்தார்.

#### கல்குடா

கல்குடாத் தொகுதியிலும் பல்வேறு கிராமங்களில் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. ஆங்காங்கு கறுத்தக் கொடிகள் பறந்த வண்ணமிருந்தன. கற்குடாத் தொகுதி ஹர்த்தால் ஏற்

(9-ம் பக்கம் பார்க்க)

சகலவித மூலநோய் நிவாரணி

ரிச்லெட்ஸ்

ப்ளட் பியூரிபயர்

(RICHELET'S BLOOD PURIFIER)

இரத்த சுத்தி செய்து




மூலம்

வாதம்

படை
(ECZEMA)

மாத விடாய்



கோளாறுகள்

முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் முடிந்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடையவேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானாகவே ஏற்படும்.

எங்கும் கிடைக்கும்.

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன்: 2885)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய அறிஞர் இயற்றிய இன் சுவைத் தமிழ் ஏடு

## மருதமுனை தந்த "சின்ன ஆலிம் அப்பா"வின் சீரான காவியம்

# "ஞானரை வென்ருன்"

பண்டைக்காலம் தொட்டு இலங்கையின் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்து வந்த தமிழ் பேசும் மக்களிடம் சவிதை புனையும் கலை இருந்து வந்திருக்கிறது. அக்கிய நூலை அச்சு வாகனமேற்றும் வசதிகள் ஏனைய பகுதிகளை விட இங்கு இன்றும் குறைவுதான். எழுத்தறியாக் கவிஞர்களும் இன்றும் இருக்கின்றனர் நினைத்த உடனேயே கவிதை மழையைப் பொழியும் கவிமுகில்கள் இருக்கின்றனர். 19ம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்து "சின்ன ஆலிம் அப்பா" என்று மக்களால் சிறப்புடன் அழைக்கப்பட்ட இபுறுகிம் லெவ்வை ஆலிம் அவர்கள் படைத்த "ஞானரை வென்ருன்" நூலின் சிறப்பினை ஆசிரியர் இங்கு விளக்கியுள்ளார்.

கிழக்கிலங்கையில் மட்டு நகர் மாவட்டத்தில் மருதமுனை என்ருெரு ஊருண்டு. விரிந்து வளைந்து அலைமோதி நின்று, மீனவருக்கும் ஏனையவர்க்கும், வாழ்வளிக்கும் கடலைக்கிழக் கெல்லையாகவும், செந்நெல் செழித்து நிற்கும் களனியை மேற்கிலும், பழம்பெரும் தமிழ் பேசும் மக்கள் வாழும் நீலாவணை, பாண்டிருப்பு, என்னுமிரு கிராமங்களை முறையே வடக்கிலும் தெற்கிலும், எல்லையாகக் கொண்டது மருதமுனை.

தித்திக்கும் தீந்தமிழைத் தாய்மொழியாய்க்கொண்ட முஸ்லீம் மக்கள் கூட்டம் நெருங்கி வாழும் இக்கிராமம், மதுரைமரச் சோலைகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது. பண்டை நாட்களில் சமீப காலம் வரை மதுரமுனை என்றே மனமகிழ்வுடன் அழைக்கப்பட்டும் வந்தது.

நாவலரும், பாவலரும், கிராமியக் கவிதைகளை இசைக்கும் கோதயரும், அறவழி நின்று அமலனை அடைந்த ஞானிகளும், இப்பதியின் சிறக்கும் சிறப்புக்கும் காரணமாய் அமைந்துள்ளனர். மருதமுனையில் தோன்றி யார்க்க ஞானமும், சித்தி நிறை முத்தி பெறும் அறவாழ்வினையும் கொண்டு விளங்கியவர் இபுறுகிம் லெவ்வை ஆலீம். 19ம் நூற்றுண்டின் முற்பகுதியில் இக்கிராமத்தில் வாழ்நது கொண்டிருந்த இப்பெரியார் "சின்ன ஆலிம அப்பா" என்ற சிறப்புப் பெயர் கொண்டழைக்கப் பட்டார்.

இன் தமிழில் கவி இயற்றும் திறனைப் பெற்றிருந்த இவர் இயற்றிய தீந்தமிழ் கவிதைகளில் "மழைக் காவியம்" 'ஞானரை வென்

### அபுல் கலாம்

ருன்" என்பன சொன்னயமும். பொருட் செறிவும் கவி இன்பமும் கொண்டன.

தமது வாழ்க்கையின் பிற்பகுதியை திருகோணமலைத் திருப்பதியைச் சேர்ந்த கவாட்டிக் குடாவில் அமைதியாய்க் கழித்து ஆங்கு அமலனடி சேர்ந்தார் இப்பெரியார். ஆங்கிலேயர் புகை வண்டிப் பாதை அமைத்த காலத்து இந்த ஆத்மஞானி காட்டிய அற்புதங்கண்டு கல்லறையைச் சேதப்படுத்தாது புகைவண்டிப்பாதை அமைத்தனர். அன்றியும் ஞானியின் சமாதியை அரசினர் பாதுகாத்துவரல் வேண்டும் என்று ஏற்பாடும் செய்தனர்.

சின்ன ஆலிம்மப்பா எத்துணை பரந்த. சிறந்த தமிழ்ப் புலமை கொண்டு விளங்கிருர் என்பது அவர் இயற்றிய "ஞானரை வென்ருன்" என்னும் சிறு நூலில் காணக் கிடக்கிறது. தன்னை ஈன்றெடுத்துப் போற்றிவளர்த்த மதுர முனைமாதாவை—

"மங்கையுற் றுறைந்த வாழ்வூரி
லங்கிய பதிநந் செந்நெல்
பொங்கிய செழிப்பு வாய்ந்த
பூவையர் கற்புமாறுப்
பொன்னக ரொப்பச் செல்வம்
பொலிந்திடுந் தடாகஞ் சூழுங்
குந்திடக் குலக்கண்மாவின்
கூட்டிவாழ் மதுரை யூரே"

என்று போற்றிப் புகழ்ந்து நிற்கின்ருர்.

நூலாசிரியரின் தமிழ் அறிவு வியத்தகு முறையில் இருந்தது. காட்டாக:

"உரிச் சொற் றிவாகர நிகண்டு
முன்னுரை சின்னூல்
நன்னூல்
பொருட் சொல்லும் நைடதமும்
போற்றும் பாட்டியல் புயாவும்
மருட் சொல்லுந் தொடரு
மீறும் வாழ் வஞ்சா எழுத்துங்
கற்ற
குருச் சொல்லை அறியேன்
சின்னேன் கூறினேன் குவல
மீதே'

நூலாசிரியரின் அவையடக்கத்தை அழகுறக் காட்டும் இக் காவியம் "ஞானரை வென்ருன்" என்றும் அச்சிறு நூலில் இடம்பெற்றுள்ள அறுபத்துமூன்று காவியங்களில் ஒன்ருகும்.

அறுபத்து மூன்ருண்டு அருமுறையில் வாழ்ந்து நெறிவகுத்த அகமது நபி அவர்களின் சொல்லையும், செயலையும் அப்பழுக்கற்ற முறையில் பின்பற்றினுலொழிய ஆத்மீக வெற்றி பெறல் முடியாதென்பதில் திடநம்பிக்கை கொண்டவர் இப்பெரியார். இஸ்லாமிய தத்துவார்தங்களை அறியாது கலிமாமுதலிய ஐம்பெருங் கடமைகளை அலட்சியஞ் செய்து வறட்டு ஞானம் பேசித் திரிந்த அக்காலத்துப் போலி ஞானிகளுக்கும், மதி மயங்கிய "மஸ்த்தான்"களுக்கும் வாயாப்புக் கொடுப்பதே இந்நூலின் நோக்கமாகும்!

உள்ளினில் வணக்க
மென்றுற்ற ஞானரே
விள்ளுதற் கரிய நம் வேத
நந்நபி
தெள்ளிய மறைகளில்
தெளிர்ந்த மார்க்கமில்
கள்ளமை கவல்பவர்
"காபிராவரே"

நயமிகு இந்த நான்கு அடிகளும் "ஷரியத்தைப்" பேணுவதில் மக்கள் மிகவும் கண்ணுங் கருத்துமாய் இருத்தல் வேண்டும். என்பதை அறிவுறுத்துகிறது. 'கற்கக் கசடற"... என்பதை அறியாதவர் இன்றும் இருக்க வே செய்கின்றனர். இத்தகையோரை:—

குருவிலா வித்தை போலும்
குணமிலா வமல்கள் போலு
முருவிலா உறுப்பு போலு
முவமையிற்றிடு பாடல்போற்
பொருளிலார் செல்வம்
போலும் பொறியிலார் கற்ற
ஞான
முரை யறியார் பொன்
செம்பாய் விடுமதனுவமை
தானே

என்று அழகுற வர்ணிக்கிருர் நூலாசிரியர்.

மேல்வரும் சில பாடல்கள் இந்நூலின் நோக்கத்தையும் சிறப்பையும் காவிய நயத்தையும் எடுத்துக் காட்டுகின்றன:—

"இருளதா லெழும்புங் காற்ருல்
இலங்கிய மேகந் தன்னல்
அருள் பெற உண்டு மோந்த
அப்பிறை லதனுள் மண்ணுற்
பொருளொரு வைத்துங்
கூட்டிப்
பொதிந்திடு பனியாதத்தின்
மருளர் "ஞானரை
வென்ருனே"
வழுத்த வல்லவனே காப்பு

(பனியாதம்: — ஆதத்தின் மக்கள்)

அறிவிலாத மூடரே
அமட்டுகின்ற மாடரே
முறிவிலாத தொழுகையை
முயன்றிலாத கேடரே
மறுவிலாத வள்ளல் சொன்
மறுத்துவந்த வண்டரே
நெறியி னேடு ரிவையிங்கு
நீயறிந்து விள்ளடா

"பாரமறை தினவர் படைதவனை
நாவால்
நீரினு நெருப்பினு
நிகழ்த்தவரீ தாகும்
பாரிலும் படைப்பிலும்
பல்லுயிரி னுள்ளும்
காரிலிங் கடல்களிலுங் காண
வரி தென்ருர்"

சந்தன மகிலை தேக்குத்
தடந்தரும் வருசகைப் பூவில்
வந்து நின்றறுகால் வண்டு
மது வினை மதுதாயுண்டு
கண்டவரறியார் கண்டு
கேட்டவயறியா ரென்று
மிந்தையுற் றரிந்திரரகில்
நீங்கதா நாங்களென்றும்"....

இத்தையுற் றறிந்திலாதா
நீந்து சொல் ஞானத்
தொப்பாம்
நத்திலாக் குருடன் கையில்
நஞ்சினை நல்கிச் சொல்வார்
நித்தில மீதென் றெண்ணு
நிகரிதற் கொப்பொன்றில்லை
சற்றெனுந் தெரிந்தோர்
முனனே தானிடா
ரென்றவாறே.

### இஸ்லாம் வளர்த்த தமிழ்

# தாரம் இழந்தவனைத் தாலிகட்டப் போறதில்லை

## எருக்கலம்பிட்டியில் ஏடேருதிருந்து வரும் எழிலான கவிதைகள்

வட இலங்கையின் மன்னர் பகுதியில் எருக்கலம்பிட்டி என்னும் சிற்றூர் இருக்கிறது. அங்கு வதியும் மக்களில் பெரும்பாலோர் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மத்தியில் நர்த்தனம் புரியும் கிராமிய இலக்கியக் கவிதைகளை சுவைக்குந்தோறும் இன்பம் பயக்குகிறது.

ஜெசிமாவுக்குத்திருமணம் நடந்து ஓர் ஆண்டும் பூர்த்தியாகி விட்டது. ஆனல் ஏனே அவளுக்கு இன்னும் குழந்தைப் பாக்கியம் கொடுத்து வைக்கவில்லை. குழந்தை பிறக்க வேண்டும், அக்குழந்தை பேசும் மழலை மொழியில் மெய் மறந்திருக்க வேண்டும். அந்தப் பிஞ்சுக் குழந்தை தவழ்ந்து தவழ்ந்து விளையாடுவதை இந்த ஸ்தூலக் கண்களால் கண்டு இறும்பூதெய்த வேண்டும். அந்தப் பாலனுக்கு சோறு ஊட்ட வேண்டும், என்றெல்லாம் அவள் கனவு கண்டாள். திருமணம் முடிந்ததும் குழந்தை பிறக்க வேண்டும் என்னும் [illegible] ஆசைதான் [illegible] மூலம் பொழிகிருள்:—

பால் போல் நிலா வெறிக்கப்
பார்த்ததிலே சோறு
தின்னப்
பாலன் விளையாட
பாக்கியம் தா ஆண்டவனே.

அப்படிக் குழந்தைப் பாக்கியம் கிடைத்தாலும் ஆண் பிள்ளை வேண்டவே வேண்டாம். பெண்பிள்ளை தான் வேண்டும், என்று ஜெசிமா ஆசைப்படுகிருள். அதற்காக அவள் ஆண்டவனை வழிபடுகிருள்:—

அ. டேவிற் இராசையா

ஆண்பிள்ளப் பிள்ளை வேணு
அதிலே ஓர் ஆசை வேணு
பெண்பிள்ளப் பிள்ளை என்ருல்
பூலோகத்தில் தாவனல்லா.

பெண்ணை அன்புடன் வளர்த்து அவள் குமரிப் பருவம் அடைந்ததும் ஒருவனுக்குச் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று ஒரு தாயுள்ளத்தில் ஆசை அரும்புவது இயல்பு. அந்தக் காட்சிதான் அவளுக்குக் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். தாயுள்ளம் பூரிப்படையும். ஜெசிமாவின் உள்ளத்திலும் அந்த ஆசைத் தான் எழுந்தது...

கட்டிக் கொடுக்க வேண்டும்!
கண் குளிரப் பார்க்க
வேண்டும்
மறவனையில் வைக்க வேண்டும்
நல் மகளாரைத்
தாவனல்லா.

ஜெசிமாவின் எண்ணம் நிறைவேறுகிறது. ஆம், பெண் குழந்தை பிறக்கிறது அவளுக்கு. நாட்கள் நகர்ந்தன. எழில் சொட்டும் பருவ மங்கையாக திகழ்ந்தாள் ஜெசிமாவின் மகள். பெண் பேசி மாப்பிள்ளை வீட்டார் அவள் இல்லத்திற்கு வர ஆரம்பித்து விட்டனர். திருமணம் செய்து தாரம் இழந்தவனொருவன் ஜெசிமாவின் மகளை மறுமணம் செய்துகொள்ளப் பெண் கேட்டு வந்தான். இந்தத் திருமணத்தில் அவளுக்குப் பிடித்தமில்லை. அவள் கூறுகிருள்:—

தங்கத் தயிலாவைத்
தாரன் என்று
சொன்னுலும்
தாரம் இழந்தவனைத்
தாலி கட்டப் போறதில்லை.

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழிதது அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லால் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

க. இரத்னசபாபதி, காரைநகர்.

கே: எங்கள் ஊரில் வசிக்கும் ஒரு வயோதிபருக்குப் பெண்களைக் கண்டால் சபலம் தட்டுகிறதே ஏன்?

ப: தன் இளமைப் பருவத்தை நினைவூட்டுவதால்.

ஃ

ஆர். ஏஸ். கந்தையா, ஏறுவூர்.

கே: பெண்ணுல் மறக்க முடியாதது எது?

ப: தன் முதல் அனுபவம்.

ஃ

க. சிவசிதம்பரம், கொடிகாமம்.

கே: ஒரு பெண் ஒவ்வொரு மாப்பிள்ளையையும் தட்டிக் கழித்துக் கொண்டு வருகிருள். காரணம் என்ன?

ப: ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு.

ஃ

எஸ்.கமலம், பதுளை.

கே: பெண்களுக்குச் சமத்துவம் அளிப்பது எது?

ப: இருட்டு.

ஃ

செல்வி. பாலாமணி, வண்ணுர்பண்ணை.

கே: சமாதானமாகவும் இன்பமாகவும் மனிதனை வாழ வைப்பது எது?

ப: தானும் வாழவேண்டும், பிறரும் வாழவேண்டும் என்ற எண்ணம்.

ஃ

வி சரவணபகவான், கண்டி.

கே: தமிழில் கவிதை இயற்றும் புலமை வாய்ந்த பெண்கள் இருக்கிருர்களா?

ப: ஏன் இல்லை? ஒப்பாரி வைக்கும் பெண்களை நீங்கள் பார்த்ததில்லையா?

ஃ

எம். ஐ. நஜிமுதீன் கொழும்பு.

கே: அரசியலை வெறுத்தவருக்குச் சடுதியாக அரசியல ஈடுபாடு வரக் காரணம் என்ன? திரு. சுந்தரலிங்கத்தை தான் குறிப்பிடுகிறேன்.

ப: மூதூர் தேர்தலில் தான் வென்றுலும் தோல்வியுற்றுலும் கவலைப்பட போவதில்லை என்று திரு. சுந்தரலிங்கம் அறிக்கை விட்டிருக்கிருர். தோல்வி நிச்சயம் என்பதை அவர் முன் கூடியே உணர்ந்திருக்கிருர் என்பதையே இந்த அறிக்கை தெளிவு படுத்துகிறது. அப்படியாளுல் எதற்காக போட்டியிட வேண்டும் என்று கேட்கலாம். காரணம், தான் வெற்றி பெருவிட்டாலும் தமிழரசுப் பிரதிநிதி தோல்வியடைய வேண்டுமென்பதுதான். அதாவது: தனது இரு கண்களும் குருடானுலும் கவலையில்லை. மாற்றுனின், ஒரு கண்ணுவது குருடாக வேண்டுமென்ற கெடுமதி தான் அவருக்குத் திடீரென அரசியலில் ஈடுபாடு ஏற்படக் காரணம். மூதூர் தமிழ் பேசும் மக்களிடையே பிளவை ஏற்படுத்தி தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று தப்புக் கணக்கு போட்டிருக்கிருர். கெடுவான் கேடுநினைப்பான்!

ஃ

இ. திருநாவுக்கரசு, ஸ்பிரிங்வேலி.

கே: பதவி காரணமாக தாய் மொழியை மறக்கும் தமிழர்களின் வருங்கால நிலை எப்படியிருக்கும்!

ப: தாமரை இலைத் தண்ணீர் போலிருக்கும்.

ஃ

ப. இராசதுரை, ஊர்காவற்றுறை.

கே: தமிழரசுக் கட்சியின் போராட்டங்களை எதிர்த்து அறிக்கைவிடும் அ. இ. தமிழ் காங்கிரஸ் சிங்கள அரசாங்கத்தின் எதேச்சாதிகார போக்கை எதிர்த்து என்ருவது போராட்டம் நடத்தியிருக்கிறதா?

ப: போராட்டமா! அது ருத்தல் என்ன விலையாக விற்கிறது என்று கேட்கிருர் ஒரு காங்கிரஸ் பிரமுகர்.




ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: "அத்தான்" என உங்கள் மனைவி குழையும் போது அது எதற்காக வென்று முன் கூட்டியே தாங்கள் அறிவீர்களா?

ப: பாக்கெட்டிலுள்ள மணிபர்ஸைக் காலி பண்ணத்தான் என்பது எனக்குத் தெரியும்.

ஃ

க. குமாரவேல், இளவாலை.

கே: இக் கேணியில் "செய்யத் தகாதன" என்று ஒரு விளம்பரம் கீரிமலைக் கேணியருகில் போட்டிருக்கிருர்கள். அதைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: "செய்யத் தகுந்தவை" என்று ஒரு விளம்பரமும் அங்கு போட வேண்டுமென்பதுதான்!

ஃ

மு. சுப்பிரமணியம், மாவிட்டபுரம்.

கே: கல்வி மந்திரியின் மூளையை எதற்கு ஒப்பிடலாம்?

ப: கோழிக் கூண்டுக்கு.

## பரமஹம்ஸதாஸனுக்கு-

### "மஹாகவி"

உன்னேடு பேசி உலகை  
மறந்திருக்க  
எந் நாள் கிடைக்கும் இனி எனக்கு!  
தென்னுடு,  
தேவாரம் தந்த திருநாடு  
நின் நாடே;  
"நீ வா!" என ஏற்க நிற்கிறது  
மூவாத  
பாட்டுக்க ளோடும், பணமென்று  
நீ சேர்த்த  
ஏட்டுக் குவையோடும் ஏகுங்கால்,  
பூட்டா நின்  
வெள்ளை உளத்தை, விளக் கிட்டுக்  
கொண்டிருக்கும்  
பிள்ளைச் சிரிப்பைப் பிரிகின்றேம்.  
உள்ளபடி,  
அண்ணு, உன் னுலும் அருநண்பர்  
தம்மிதயம்  
புண்ணுன தே இப் பொழுது!

கு. பொன்னுத்துரை, சுழிபுரம்,

கே: காமன்வெல்த் மகாநாட்டில் தென்னுபிரிக்க இன ஒதுக்கலை வன்மையாகக் கண்டித்த இலங்கைப் பிரதமர் தன் நாட்டில் தான் நடத்துவது இன ஒதுக்கல் என்பதை அறியாரோ?

ப: ஊருக்குத்தான் உபதேசம்-தனக்கு அல்ல.

ஃ

எஸ். ஆர். ஜெகநாதன், நோர்வூட்.

கே: குயுக்தியாரே! எனக்கு அவசரமாக ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது கடன் கொடுத்து உதவி செய்வீரா?

ப: நல்ல ஆளையா நீர்! போயும் போயும் நான்தான் அகப்பட்டேனு கடன் கேட்க! சார்லி சாப்ளின், கடன் கேட்ட நண்பர் ஒருவருக்குச் சொன்ன பதிலைத்தான் உமக்கும் சொல்லப் போகிறேன். அதாவது: "உங்களுக்கு கடன் [illegible]கலாமா என்று [illegible] கறிஞரைக் கேட்கப் போகிறேன். அவர் கொடுக்கலாமென்று சொன்னுல், உடனே அவரை நீக்கிவிட்டு வேருெரு வழக்கறிஞரை அமர்த்திக் கொள்வேன்"

ஃ

எஸ். விநாயகமூர்த்தி, கொழும்பு—11.

கே: கொம்யுனிஸ்ட் கட்சி துப்பாக்கி ஏந்திப் போராடு மென்று திரு. வி. பொன்னம்பலம் ஒரு கூட்டத்தில் பேசியிருக்கிருரே! ஏந்துவதற்கு இவர்களுக்குத் துப்பாக்கி ஏது?

திருவாளர்  
குயுக்தியார்  
மே/பா சுதந்திரன்  
தபால் பெட்டி இல. 1183  
கொழும்பு-12.

ப: பூ! இதுதானு பிரமாதம்! சிறுவர்கள் 'டுமீல் டுமீல்' என்று சுட்டு காக்கைகளை மிரட்டி விரட்டுவார்களே விளையாட்டுத் துப்பாக்கிகள்! அவை இப்போதெல்லாம் நடைபாதைக் கடைகளில் விலைக்குக் கிடைப்பதில்லை என்பதை கவனித்தீர்களா? புரட்சி செய்வதற்காக அந்தத் துப்பாக்கிகளையெல்லாம் சேகரித்து கொம்யுனிஸ்டுகள் தங்களின் ஆயுதக் கிடங்குகளில் குவித்து வைத்திருக்கிருர்களாம். சிறுவர்களின் விளையாட்டுத் துப்பாக்கிக்குப் பஞ்சம் ஏற்பட்டக் காரணம் இப்பொழுது தெரிகிறதா? போராட்டம் கிளம்பியதும் கொம்யுனிஸ்டுகள் இந்தத் துப்பாக்கிகளைக் கொண்டுதான் எதிரிகளைச் சுட்டு வீழ்த்தப் போகிருர்களாம்! அந்தோ பரிதாபம்! அறிவு இப்படியா மழுங்கிப் போகவேண்டும்?

ஃ

க. இரத்தினசிங்கம், கிளிநொச்சி.

கே: "கல்கண்டு" சிலருக்கு [illegible]

ப: [illegible] காரணம்.

எஸ். வி. சிவானந்தம், மட்டக்களப்பு.

கே: நான் ஒரு முக்கியமான பொருளைக் காணுமற் போட்டுவிட்டு பத்து தினங்களாகத் தேடுகிறேன். கிடைக்கவில்லையே! என்ன செய்யலாம்?

ப: அடடே! இருதயத்தைக் காணுமற் போட்டுவிட்டீரோ!

ஃ

வி. பத்மாவதி, கண்டி.

கே. நான் இனிமையாகப் பாடுகிறேன். என சிநேகிதிகள் என் குரலைக் கேட்டு பயப்படுகிருர்கள்! பொருமைதான் இதற்குக் காரணமா?

ப: உங்கள் குரல் ஹைட்ரஜன் குண்டைத் தவறிப் போட்டுவிட்ட விமானியின் குரல் போலிருக்கிறது போலும்!

ஃ

ஏ. ஏ. எம். ரபீக், நிகவரட்டிய.

கே: இந்த அரசாங்கம் உங்கள் கையில் வந்து விட்டால் முதலில் எதைச் சாதிப்பீர்கள்?

ப: கண்ணுடிச் சேலை விற்பனையை உடனடியாகத் தடை செய்வேன்.

ஃ

எ. பூமையா, சின்னநாவலை.

கே: கிராமத்துப் பெண்ணுக்கும் பட்டணத்துப் பெண்ணுக்கும் என்ன வித்தியாசம்?

ப: முன்னையது கட்டுப் பெட்டி-பின்னையது வண்ணுத்திப் பூச்சி.

பி. ஏ. ராஜதுரை, மத்துகம.

கே: ஆரணங்குகளின் ஆசை எதைப் போன்றது?

ப: இரு பக்கமும் வெட்டும் சவர பிளேடைப் போன்றது,

ஃ

எஸ். எம். முகமது ஹனிபா, மண்டூர்.

கே: ஒரு வாலிபனை பல மனைவியர் காதலித்தால் அவன் என்ன செய்ய வேண்டும்?

ப: கோபால கிருஷ்ணனுக மாறவேண்டும்.

ஃ

"கிருபா" கல்முனை.

கே: ஒரு மாணவிக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தேன். "படிப்பித்த படியால் நீங்களே என்னை வரித்துக்கொள்ள வேண்டும்" என்று அவள் பிடிவாதம் பிடிக்கிருள். இது நியாயமா?

ப: ஒரு வேளை நீங்கள் சொல்லிக் கொடுத்த பாடம் காதல் பாடமோ!

ஃ

ரா. செல்வராஜா, இறக்குவானை.

கே: கடவுள் ஏன் மனிதரைப் படைத்தார்?

ப: படைப்புத் தொழிலினின்று ஓய்வு பெற.

ஃ

இதய சூரியன், இறக்குவானை.

கே: அடங்கிக் கிடந்த "அடங்காத் தமிழன்" மூதூரிலே மோதுகிருராமே! சொந்தத் தொகுதியில் கற்ற பாடம் போதாதோ?

ப: நல்ல மாடானுல்தான் உள்ளூரிலே விலை போகுமே!

ஃ

சி. பரமலிங்கம், வட்டக்கொட.

கே: விமான நிலையத்தில் மந்திரிகளை வரவேற்ற யாழ்ப்பாணம் எம். பிக்கு மந்திரிகள் கொடுக்கப் போகும் சன்மானம் என்ன?

ப: மானம் போன பின், சன்மானம் எதுக்கையா?


## "மொரிஸன்"
## பம்புகள்



மண்ணெண்ணெய் டீசல் எண்ணெய்களில் குறைந்த செலவில் நீடியகாலம் உழைத்து பலன் பெறக்கூடியது.

1½, 2, 2½ அங்குல அளவுகளில் கிடைக்கும்.

ஏக வினியோகஸ்தர்கள்:

**கே. என். அப்துல்காதர் ராவுத்தர்**

அன் கம்பெனி லிமிட்டெட்,  
312, ஸ்கின்னர்ஸ் ரோடு தெற்கு, கொழும்பு-10.  
டெலிபோன்: 2956, தந்தி: MEDAL

வடமாகாண விநியோகஸ்தர்கள்:

ராஜூ ஸ்டோர்ஸ்,  
2/B, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சந்திக்கு வந்தவை!

—காலகண்டன்—

## மக்கள் வரவு செலவுத் திட்டமும் பொது உடமைக் கட்சியும்

வரப்போகின்ற வரவு செலவுத் திட்டம் மக்கள் திட்டமாக இருக்க வேண்டுமென கம்யூனிஸ்ட் கட்சி பிரசாரங்கள் செய்து வருகிறது. ஆட்சியாளர்களுடன் 'கள்ளக்காதல்' கொண்டுள்ள கம்யூனிஸ்ட் கட்சி, இது விடயத்தை நிதிமந்திரியிடம் நேரடியாகவே சொல்லியிருக்கலாமே; அதை விட்டுவிட்டு, இப்போ மூலைமுடுக்குகளிலெல்லாம் பிரசாரம் செய்ய ஆரம்பித்துள்ளது.

அண்மையில் மட்டக்களப்பில் கம்யூனிஸ்ட்கட்சிக் காரியாலயத்தில் 22 பேர்கள் கூடி "மக்கள் வரவு செலவுத் திட்டம்" சம்பந்தமாக அலசி ஆராய்ந்தார்கள். இந்த 22 பேர்களில் 6 பேர் பேச்சாளர்கள். கூடிய அத்தனை பேரும் பொருளாதார சூனியர்கள்.

கூடியபடியால் ஏதாவது பேசத்தானே வேண்டும். பேசினார்கள்.

முதல் விடயம்:—

மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி மேதின விழா விமர்சனம். மே 4-ம் திகதிதான் அங்கு மேதின விழா நடைபெற்றது. 4-ம் திகதியும் விழாவுக்குப் பொருத்தமானதுதான் என்பதைப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். அது "தென்றல்" பத்திரிகையில் வெளியான கட்டுரை ஒன்றின் தழுவலாகையினாலும், தி. மு. க. வெளியீடான தென்றலை ஆதரிப்பதாலும், தமிழரசாருக்கும் தி. மு. க. வுக்கும் தொடர்புண்டு என்பது உண்மை என்று ஒரு தோழ "அறிஞர்" வாதிட்டார்.

தென்றல் "தமிழ் தேசியக் கட்சி"யின் பத்திரிகை என்பதே தோழருக்குத் தெரியவில்லை.

இரண்டாவது:—

சுதந்திரன் குயுக்தியார் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் மேதினம் முதன் முதலில் 1886-ல் கொண்டாடப்பட்டது என்று கூறியது தவறும். 1886-ம் வருடம் மே மாதம் முதல் தேதி கொண்டாடப்பட்டது என்று குறிப்பிடாதது "குயுக்தியாரின் அறிவீ"னத்தைக் காட்டுகிறதாம். எப்படி இருக்கிறது 'தோழரின் தர்க்கம்?

மக்கள் வரவு செலவுத் திட்டம் தயாரிக்க வேண்டுமென்று ஆலோசனை (ஆட்சியாளருக்கு) கூறும் கூட்டத்தின் முடிவு இதுதான்.........

### மந்திரிகளுக்கு வரவேற்பு......?

"வல்வெட்டித்துறைக்கு மந்திரிகளை வரவேற்றதில் பெரிய விடயமொன்று தங்கியிருக்கிறது. உமக்கு இது தெரியுமா? காலகண்டரே," என்று அப்பாக்குட்டி அம்மான் என் காதோடுகாதாகக் கேட்டார்! எதுவுமே தெரியாதென்றதோரணையில் தலையை அசைத்தேன். காதோடு காதாக என்னிடம் சில சம்பவங்களைக் கூறிவைத்தார்.

தென்னிந்தியப் பத்திரிகைகளில், அடிக்கடி கள்ளக் கடத்தல் சாமான்கள் பிடிபட்டன என்று செய்திகள் வெளிவருகின்றன அல்லவா? அந்தச் செய்திகளுக்குக் கதாநாயகர்களாக விளங்கும் சிலர், தங்கள் அந்தரங்கங்களை ஆட்சியினரோ, கடற்காவற் படையினரோ கண்டுவிடாதிருக்க ஒரு 'போர்வை' போர்க்கவே இந்த மந்திரிமார் வரவேற்பட மகுடி ஊதப்பட்டதாம். ஆளும் கட்சித் தாசர்கள் என்று அத்தாட்சி பண்ணுவதில் இருவகைகளில் நன்மையுண்டு. குறிப்பிட்ட நபர்களின் எல்லைக்குள் கடலில் காவல் குறையும். தற்செயலாகப் பிடிபட்டு விட்டாலும் சமாளித்துவிட முடியும்.

அம்மானின் சொல் கேட்டு நான் திகைத்தேன்.

அவசரகாலச் சட்டத்தையும் போட்டு அச்சட்டத்தின் துணையுடனேயே சில காரியங்களையும் ஆற்றிவிடலாம் என்று எண்ணியுள்ள ஆட்சியாளர்களுக்கு எதிர்ப்புக் காட்ட அங்காங்கே கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. எஜமானரின் கண்களில் கருமை படாதிருக்க ராணுவமும் பொலீசும் நல்ல முயற்சிகள் எடுத்துக்கொண்டனவாம்—பாராட்டுக்களும் பெற்றனவாம்.

நமது அனுதாபத்துக்குரிய யாழ்ப்பாண பிரதிநிதி துரையப்பா முன்னின்று நடாத்தினாராம். சோமசேகரம் அவர்களுடைய தலையும் சிறப்பாகத் தெனபட்டதாம்—வைபவங்களில்.

### நெல்லியடி "இன்ஸ்டிட்டியூட்"

நெல்லியடி "யுனைட்டெட் இன்ஸ்டிட்டியூட்" என்ற ஸ்தாபனம் ஒன்றுள்ளது. அங்கே மொத்தம் 90 மாணவர்கள் சிங்களம் படிக்கின்றனர். இதில் 17 பேர் ஆசிரியர்கள். 8 பேர் சிங்களத்தில் 3ம் வகுப்பு சித்தியடைந்து விட்டனராம். இந்த ஸ்தாபனத்துக்கு ஒரு "இன்சுரன்ஸ் கம்பெனி" அதிகாரிதான் அதிபராம். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாலு காசு சம்பாதிக்க வழி கிடைத்து விட்டது இவருக்கு.

தற்போது அரச சேவையிலுள்ள ஒருசிலருக்குச் சம்பள உயர்வும், பதவி உயர்வும் கிடைக்கலாம். பிறகு, "சிங்களம் படித்தும் பயனில்லை சிறிமாவை நம்பியும் பயனில்லை"..........

### சிறை சேரியில் "சிங்களதாசன்"

பெரிய தலைகளைக் காக்காய் பிடித்து சிறைசேரியில் அதிகமான வருடங்கள் மாற்ற மின்றிச்காரிய மாற்றும் ஒரு தமிழ் உத்தியோகத்தர் தான் ஒரு "சிங்கள தாசன்" என்பதை வெளிக்காட்டுவதில் விருப்புடையவராகத் திகழுவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

சிங்களப் புத்தகங்களை (மற்றவர்கள் பார்க்கும் வண்ணம்) காவிச் செல்வதில் ஒரு திருப்தி அடையும் இப்பேர்வழி காரியாலயத்தில் இருந்து கடமை பார்க்கும் வேளைகளில், தன் சிங்கள அன்பர்களுக்கும், மேல் அதிகாரிகளுக்கும், தன் அடிமைப் புத்தியை வெளிக்காட்டும் நோக்கத்துடன் உலைத்த சப்தமிட்டு சிங்களம் படிப்பாராம். தமிழ் உணர்ச்சியுள்ள வாலிபர்கள் பலர் அங்குள்ளனர். இந்தச்


# நாகரிக ஆடவர்கள் விரும்புவது கூந்தல் கிரீம்

அழகான தோற்றத்துடன் திகழ கேசம் நன்முக படிந்திருக்கவேண்டும். அன்ஸோரா கூந்தல் கிரீம் கேசத்தை நன்முகப் படியச்செய்து அழகாயும் கெம்பீரமாகவும் தோற்றமளிக்கச் செய்கிறது.






## அன்ஸோரா

உங்கள் ரோமத்தை மிருதுவாகவும், பளபளப்பாகவும் நாள் பூராவும் வைத்திருப்பதுடன், ரோமம் உதிர்வதைத் தடுத்து ரோமத்தை ஆரோக்கியமாகவும், சுத்தமாகவும் வைத்திருக்கிறது.

அன்ஸோரா ஓர் அற்புதமான நவீன கூந்தல் கிரீம். அத்துடன் பரிமளமான வாசனையும் கொண்டது. வைத்திய நிபுணர்களால் பரீட்சிக்கப்பட்டு தீங்கற்றதென நிரூபணம் செய்யப்பட்டது. இலங்கையடங்கிலுமுள்ள எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

## துரை அருள் அன் கம்பெனி

லிமிட்டெட்,
93, கெய்ஸர் வீதி, கொழும்பு-11.
போன்: 4588.

CFA : DAC 1


## 'பொலிசாரின் பேயாட்டம்

## நாகநாதனை நையப்புடைத்தனர்

சூழுறும் எரிமலையாய், கொந்தளிக்கும் கடலாய், கொடுமை தனைச் சாடும் குணம் படைத்த கொற்றவனாய், தமிழ் பேசும் இனத்துக்கு தரணி மெச்சும் வாழ்வமைக்க தவித்தோடும் தலைவனாய் விளங்கும் நல்லூரின் பிரதிநிதியை நையப்புடைத்தார்களாம்.

புகழ் கொண்ட தமிழின் புனிதம் தெரியாது, இகழ்கின்ற ஆட்சியினால் இதயமெலாம் புண்ணாகிவிட்டு எதிர்வரும் காலத்தில் தமிழ் அரசோச்ச அயராதுபாடுபடும் அருமைத் தலைவரைத் தரையில் உருட்டினர்.

பார்த்தவர்கள் பதற, கேட்டவர்கள் பதை பதைக்கக் கொடுமை இழைத்தார்கள்—ஆட்சியாளரின் ஏவலாளர்கள்—நாட்டைக் காக்கும் நல்லவர்கள்!

அலங்கோல அரசின் அவலட்சணப்பாடம் தான் 5-6-62ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

அறுபது வயதானாலும் அயராது பாடுபடுவேன் என்று வீர முழக்கமிட்டு, வீரர் படை திரட்டி அறப்போரின் அணியில் முன் செல்லும் வீரன்—அஞ்சா நெஞ்சன்—எங்கள் இரும்பு மனிதன் நாகநாதனைத் தாக்கினார்கள் காக்கிச் சண்டைக் கனவான்கள்.

ஆணவ ஆட்சியே! உன் அட்டகாசம் இன்னும் எத்தனைநாட்களுக்கோ?

---

சிங்கள தாசரின் சிறுமதியை அவர்கள் கண்டிப்பதுண்டு—ஏன் காறி உமிழ்வதுமுண்டு.

கோபங் கொண்ட தாசர் பழி வாங்கும் படலத்தில் இறங்கி, தன் எஜமானர்களை அண்டி சில வாலிபர்களுக்கு திடீர் இடமாற்றம் பெற்றுக் கொடுத்துள்ளாராம். அவருடைய ஆத்திரம் அம்மட்டே!

### பதவி வேண்டுமானல் சிங்களத்தில் எழுது

விஞ்ஞானப் பட்டதாரியான ஒரு இளம் பெண் பதவி தேடி யாழ்ப்பாணத்தில் ஒரு கல்வி அதிகாரியின் உதவியைக் கோரினாராம். "பதவி கிடைக்கும் வரை சிங்களம் படிக்கிறார்கள். கிடைத்தவுடன் மறந்து விடுகிறார்கள். மேலதிகாரிகளுக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. உனக்கு ஒரு இடம் தரலாம்; ஆனால் நீ சிங்கள மனுப்பத்திரத்தைச் சிங்களத்திலேயே எழுதி சிங்களத்தில் கையெழுத்திட்டு அனுப்பு. நிச்சயம் இடம் கிடைக்கும்," என்று அந்த அதிகாரி கேட்டுள்ளார்.

ஐயா, அதிகாரியே உங்கள் பதவி மோகத்தினால் சொந்த இனத்தைக் காட்டிக் கொடுக்க நினைக்காதீர். சொந்த இனத்தை இழிவுபடுத்தினால் உங்கள் வம்சத்துக்கெல்லாமே பழி வந்துவிடும்—இனத்தோடு ஒத்து ஓடுங்கள்.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட இன உணர்ச்சி, உங்களைப் போல் அடிமை புத்தி கொண்டு பதவி தேடும் எத்தனையோ பித்தர்களை மனம் மாறிச் செயல் மாறி மயங்கி ஓட வைத்துவிட்டது. பாவம் உங்களுக்கு ஏன் இந்தப் புத்தி?

உம்மை......
காட்டிக் கொடுக்கும்
கயவன் இவன்! என்று
நாட்டின் நல முணர்ந்தோர்
நயமாகக் கூறிடுவர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழித் தீ போல் வந்தருளுவாயே!

காவடிச் சிந்து

(பணுகொடையில் தமிழரசுத் தலைவர்கள் தடுப்புச காவலில் வைக்கப்பட்டிருந்தபோது சிறந்த கருத்துக்கருவூலங்கள் உதயமாயின. தலைவர்களால் தினசரி பக்தி சிரத்தையுடன் பாடப்பட்டு வந்த அறப்போர் அணித் தலைவர் திரு. அரியநாயகம் இயற்றிய காவடிச் சிந்தின் முதல் பகுதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது. அடுத்தடுத்த பகுதிகள் தொடர்ந்து வெளியாகும். தடுப்புக் காவலின்போது நிகழ்ந்த சில சுவையான நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக இப்பகுதியில் வெளியாகும்.)



அறப் போர் அணித் தலைவர்
திரு. அரியநாயகம்

காப்பு:-

இடையில் மணி மேகலையும் சிலம்புக்காலும்
இலங்கு கரத் தணிவளையும் அழகுக்காதின்
துளைகளிலே குண்டலமும், மார்பை மூடி
துடிமுலையை மறைப்பதற்குப் பதக்கம் கோர்த்த
குறளெனும் முத்தாரமும் சிந்தாமணியின்
கூட்டமுத முடியுடனே நுதலின் மீது
திலகமெனக் கம்பனிட்ட அழகுத் தெய்வம்,
தேவி எங்கள் தமிழ்த்தாயே போற்றி! போற்றி!

★

ஆண்டு பல ஆயிரம் உன வயதானாலும்
அழகினிலே அன்றிருந்த நிலை மாறாது
வேண்டு பல நாட்டவரும் விரும்பிப் போற்றும்
வேய குழலே உன்பெருமை விளம்பப்போமோ!
மூண்ட சில சதிகளினால் இடையில் உந்தன்
முடி இழக்க விட்ட பெரும் மூடராஞேம்
கண்டிதனை உணர்ந்து துயில் எழுந்தோமம்மா
எழிலரசி எமைக் காத்து இரட்சிப்பாயே!

★

ஹோமகமைக் கொடுஞ்சிறையில் தமிழர் நாங்கள்
குலப் பெருமை நினைந்திதயம் குமுறுகின்றோம்.
ஆம் எனவே கேட்டிடற்கு ஆரும் இல்லை
அஞ்சாமை அது ஒன்றே அபயம் அம்மா,
தாமதம் ஏன்? நீ எழுந்து வரமாட்டாயோ?
தமிழ்த் தாயே தவறிழைத்தால் பொறுக்கொணுதோ?
ஓம் எனவே ஒரு வார்த்தை கூறும் தாயே!
ஒரு நொடியில் உரிமை பெற உதவு தாயே!

★

பணு கொடையில் பைந்தமிழர் சிறையில் வாட,
பவுசுடனே அரசோச்சும் பைத்தியங்கள்,
பணமுடையில் பதவி பறிபோகுங்காலம்
பல தொலைவில் இல்லையெனப் பகர்தல் கேட்டோம்
எனதருமை மாதாவே! எங்கள் மானம்
இதிலெல்லாம் இருக்கவில்லை இரக்கம்காட்டி,
உனது படை கரத்தேந்தி ஊழித்தீபோல்
உத்தமியே உவந்து வந்து அருளுவாயே!

—[வளரும்]

# "சர்வாதிகாரச் சாயலில் போருக்கு அறைகூவுகிறார்....!"

## மூதூர் மஜீதின் கூற்றுக்கு அப்துல்சமது மறுப்பு

வெளி நாடு சென்று திரும்பிய மூதூர் பிரதிநிதி ஜனுப் ஏ. எல். ஏ. மஜீது அவர்களுக்கு அண்மையில் ஒரு வரவேற்பு நடைபெற்றபோது, தமிழரசுக் கட்சியையும், தலைவர்களையும் அவதூருகப் பேசியிருக்கிறார் இதைக்கண்டிக்கும் முகமாக, கிண்ணியா கிராமச்சங்கத் தலைவர் ஜனுப் அர். எல். அப்துல் சமது அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கண்டுள்ள குறிப்புகளை இங்கே தருகிறோம்.

"இங்குள்ள பலர் கிராமச்சங்கங்களைக் கைபற்றி விட்டோம் என்ற பெருமிதத்தில் திளைத்துக் கிடக்கின்றனர். அவர்களால் இங்கு ஒரு வேலையும் செய்ய முடியாது; நான் செய்ய விடவும் மாட்டேன். என் போக்கையும் இவர்களால் தடைசெய்து விட முடியாது." இந்த ரீதியில் பேசியவர் சாதாரண—படிப்பறிவற்ற—பொறுப்பற்ற தனிமனிதரல்ல இத்தொகுதியின்—துடிப் புள்ள—பலரும் நம்பிக்கை கொண்டிருந்த—தலைவர்—எமது பிரதிநிதி மஜீது அவர்களே பேசினர்கள். இத்தொகுதியின் அபிவிருத்தி வேலைகளிலே—ஆக்கப்பணிகளிலே அக்கறை கொண்ட ஒருவர் என நாங்கள் கருதி வரும் மக்கள் பிரதிநிதியே இப்படிப் பேசினல் யார் தான் ஆச்சரியப்பட மாட்டார்கள்? தன்னைத் தவிர இந்நாட்டில் யாருமே நல்லது செய்யக் கூடாது—நானே செயல்வீரன் என்ற பெயரைப் பெற்று விட வேண்டுமென எண்ணினரோ அல்லது தனது கொள்கையில் வேறுபட்டு—மாறுபட்ட கருத்துள்ளவர்கள் இந்நாட்டு நலனில் பங்கு கொள்ளக் கூடாது என்று கருதினரோ தெரியவில்லை எப்படியும் இது ஒரு பொறுப்பு வாய்ந்த மனிதரின் பேச்சாக இருக்கவில்லை.

"நான் இங்கு இருந்திருந்தால் தமிழரசுக் கூட்டமே நடைபெருது தடுத்திருப்பேன்" இதுவும் ஒரு ஹிட்லரோ—முசோலினியோ பேசிய பேச்சன்று. எங்கள் பிரதிநிதி மஜீதவர்களே வெளியிட்ட கருத்து. ஒரு ஜனநாயக நாட்டில் எல்லோருக்குமே பேச்சுச் சுதந்திரமுண்டு எதிர்க்கட்சிகளில் ஒன்று தமிழரசுக் கட்சி. இக்கட்சிக்குக் கூட்டம் கூட இடம் கொடுத்திருக்க மாட்டேன் என்று ஒரு அரசாங்கப் பாராளுமன்றப் பிரதிநிதி பேசுகிறார் என்றால் இவ்வரசாங்கம் ஒரு ஜனநாயக அரசாங்கமென மக்கள் நம்ப முடியுமா? பிரதிநிதியின் பேச்சில் ஒரு சர்வாதிகாரியின் தொனி வீசுகிறதல்லவா? சர்வாதிகாரியாயிருந்தால் கூட இத்தகைய கருத்தைப் பகிரங்கமாக வெளியிடக் கூசுவானல்லவா? மேலும் ஒருபடி சென்று எமது பிரதிநிதி அரசாங்கத்தின் அந்தரங்கக் கொள்கையை வெளிப் படுத்துகின்றார்.

"ஜனுப் முகம்மதலி தமிழரசுக் கட்சியின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டாலும் நாட்டுக்கு அவரால் ஒன்றுமே செய்ய முடியாது. அப்படிச் செய்வதாயின் எங்கள் மந்திரிமாரைத்தான் கெஞ்சிப் பெற வேண்டும்" என்று.

ஒன்று அவர் செய்வதற்குத் தான் தடையாய் இருப்பது போலவும், மற்றது அரசாங்கம் எதிர்க்கட்சியினை ஒதுக்கித் தள்ளிவிடும் என்று கூறுவது போலவும் அமைந்திருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் அரசியல் உண்மைகளில் சிலவற்றை அறிந்து கொள்வது நல்லது.

தற்போதையப் பாராளுமன்றத்தில் பத்துக்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் இருக்கின்றன. ஒவ்வொரு கட்சியிலிருந்தும் பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் அரைவாசிப் பகுதிக்கும் மேலே இருக்கின்றனர். இவர்கள் ஆளுங்கட்சிக்கு எதிரான கொள்கையுடையவர்கள். இவர்களைத் தெரிவு செய்து அனுப்பியவர்கள் பொதுமக்கள். இம்மக்கள் வாழும் பகுதிகளுக்கும் தேவைகள் உள்ளன. இத்தேவைகளை நிறைவேற்றி வைக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஏனென்றால் அரசாங்கத்திற்கு வந்து சேரும் பணத்தில் இவ்வெதிர்க்கட்சி மக்களுடைய பணமும் உண்டு. எதிர்க்கட்சி என்பதனால் அவர்களுடைய தேவை புறக்கணிக்கப்படுமாயின் அரசாங்கம் நல்லாசாங்கம் இல்லை என்பது தானே அர்த்தம்? எதிர்க்கட்சியினை மதிக்காது தன்னிச்சையாகக் கருமம் செய்யும் அரசாங்கத்தைச் சர்வாதிகாரமென்பர். எங்கள் பிரதிநிதி மஜீதின் பேச்சும் அரசாங்கம் சர்வாதிகாரத் தன்மையோடு கருமம் ஆற்றுகிறது என்கிறாரா? மக்களால் தெரிவு செய்யப்படும் எந்தவொரு பிரதிநிதியெனினும் கொண்டுவரும் கோரிக்கை நியாயமானதாயின் செய்து கொடுக்க வேண்டியது அரசாங்கக் கடமையல்லவா?

"அல்ஜீரியாவில் நடக்கும் பயங்கர யுத்தம் இங்கும் நடைபெறும்" இதுவும் மஜீது அவர்கள் கிண்ணியாவில் வரவேற்புக் கூட்டத்தில் பேசிய பேச்சு கிண்ணியா மக்கள் யுத்தத்திற்குத் தயாராக வேண்டுமென மறைமுகமாகத் தூண்டிவிடும் பேச்சா இது? சமாதானத்தைப் பாதுகாத்து—மக்களைச் சாந்தப்படுத்திக் கொண்டு செல்ல வேண்டியவர் பேசும் பேச்சா இது? இந்தப் பேச்சால் அறிவு குறைந்த மக்கள் உணர்ச்சி வசப்பட்டு ஒருவரை ஒருவர் தாக்க முற்பட்டால்.........

(13-ம் பக்கம் பார்க்க)

பாகப்படி மூலித் திராவகங்களால் தயாரிக்கப்பட்டது
MEVIGAR BALM
மெவிக்கார் பாம்
இது தலையிடி, தேள்கடி, வாதம், பல்வலி, இருமல், ஜலதோஷம், வெட்டுக்காயம் முதலிய வியாதிகளை நொடிப்பொழுதில் நீக்கி சுய நிலையை அடையச் செய்யும்.
ஒருமுறை உபயோகித்து உண்மை அறியுங்கள்.
எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
உங்கள் வீடுகளில் அவசியம் இருக்க வேண்டியது.
உடன் வெட்டுக் காயங்களுக்கு கை கண்ட தைலம்
விலை போத்தல் ஒன்று ரூ 1-25 சதம்
பிற ஊர்களில் ஏஜண்டுகள் தேவை.
கவி கெம்ஸ்,
19, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# தமிழையும் குறளையும் பேணுவோம்

## இளையோர் கழகத்தில் திரு. செல்வநாயகம்

"தமிழின் தொன்மையையும், அதன் வளத்தையும். சிறப்பையும் எடுத்துக்காட்ட திருக்குறள் மட்டுமே போதுமானது. திருக்குறளில் உள்ள அரிய கருத்துக்களை தமிழ் பேசும் மக்கள் ஏற்று அதன்படி ஒழுக வேண்டும் தமிழையும் குறளையும் பேணுவதன் மூலமே தமிழ்த் தாய்க்கு நாம் தொண்டு செய்ய முடியும்". இவ்வாறு கொழும்பு கிராண்ட்பாஸ் அர்ச். சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் திருவள்ளுவர் இளையோர் கழகத்தினரால் நடாத்தப்பட்ட விழாவில் தலைமை வகித்த திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறினர்.

அடுத்து திரு. ஜோன் ரேஜிஸ் அவர்கள் "வள்ளுவமும் சாணக்கியமும்" எனும் பொருள் பற்றிப் பேசினர்.

வள்ளுவர் படத்தைத் திரை நீக்கம் செய்த சகோ. கசியன் சார்லஸ் அவர்கள் தமிழினதும் குறளினதும் அருமை பெருமைகளைப் பற்றி ஆங்கிலத்தில் உரையாற்றினர். தமிழில் சொற்பொழிவாற்ற இயலாததையிட்டு அவர் தனது மன வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

திரு. தமிழ்ச் செல்வன் அவர்கள் "வள்ளுவர் கண்ட காதல் வாழ்க்கை" எனும் பொருள் பற்றி பேசினர்.

திரு. டெரன்ஸ் ஏ. பெர்டினன்டு அவர்கள் "உலகளந்த திருக்குறள்" எனும் பொருள் பற்றி சிறந்ததொரு உரையாற்றினர். பின்னர் இசை, நடன நிகழ்ச்சிகளுடன் விழா முடிவடைந்தது.

கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம்
நீடிய உழைப்பு
இவைகளுக்கு
ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND
டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்,
14, டாம் வீதி,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திய ஆராய்ச்சி:

# இனம் அழியாது பாதுகாக்க வழிதேடும் அமீபாக்கள்

## வாழ்க்கைச் சக்கரமும் வயிற்றுளைவுத் தடுப்பும்

[“என்ரமீபா”வின் வாழ்க்கைச் சக்கரத்தில் அது சிறு குடலில் சொகுசு வாழ்க்கை நடத்தும் நிலையையும் அங்கிருந்து இரு-துகள்-பெருக்க முறை மூலம் பல்கிப் பெருகி நோயாளிக்கு வேதனையைக் கொடுப்பதையும் 27-5-62ல் வெளியான கட்டுரையில் காண முடிந்தது. வாழும் சூழ்நிலை பாதக மாகும் பொழுது, இன அழிவைத் தவிர்க்கும் வண்ணம் அமீபா மேற்கொள்ளும் நடவடிக்கையைத் தொடர்ந்து வாசிக்கலாம்.]

வாழும் குடற்சுவர் அரிபட்டதும் அமீபாக்கள் தமது உடலைச் சுற்றி ஒரு தடிப்பான கவசத்தை உண்டாக்கிக் கொள்கின்றன (Encystment). வெளியுலகில் நிகழும் எந்த நிகழ்ச்சிகளினாலோ சூழ்நிலைகளினாலோ உள்ளிருக்கும் அமீபாக்களுக்கு எவ்வித பாதகமும் ஏற்படாதவாறு பாதுகாக்கவே இந்தக் கூடு (Cyst). நல்ல சூழ்நிலை மீளும் வரை, செயல் இயக்கம் எதுவுமின்றி அமீபாக்கள் உறங்கிக் கிடக்கும்; வலிப்பும் நோவும் நின்று விடும் ஆனால் இவ்வோய்வுக் காலத்தில் ஒவ்வொரு கூட்டுக்கு உள்ளும் அணுக்கரு (வழக்கம் போல் இரண்டாகப் பெருகுவதற்குப் பதிலாக) நாலாகப் பெருகியிருக்கும். படத்தில் (இ) ஒரு பகைமையான சூழலில் அழிவு ஏற்படும் சாத்தியக் கூறுகள் அதிகம் என்பதினால் இன அழிவைத் தடுப்பதற்கு உயிரினம் மேற்கொள்ளும் இனக்காப்பு நடவடிக்கை இது. இந்தக் கூட்டுக் கவசத்துடன், குடலிலிருந்து வெளியேறும் கழிவுப்

செ. குமாரசாமி

பொருட்களுடன் ஒரு பகைமையான வெளியுலகச் சூழ்நிலையை வந்து அடைகின்றன அமீபாக்கள். படம் (ஊ) இந்தக் கட்டத்தில் இவை நோய்—தரு—நிலையில் (Infective Stage) இருக்கின்றன. வாழ்க்கைச் சக்கரம் தொடர்கிறது.

### ஐந்தில் ஒருவருக்கு அமீபிக் வயிற்றுளைவு

இடது கை துப்பரவாகக் கழுவப்படாவிட்டால் கையில் ஒட்டியிருந்து (படம் ஈ) உணவோடு வாய் மூலமாக மீண்டும் குடற் சுவரை அடைகின்றன, அமீபாக்கள். இங்கே கவசக் கூட்டை உடைத்து வெளியேறி மீண்டும் ஆயிரக் கணக்கில் தம் கைவரிசையைக் குடலில் காட்ட ஆரம்பித்து விடுகின்றன. இவ்வாறு இடது கை மூலம் மீண்டும் மீண்டும் ஒரே நோயாளி நோய்த் தொற்றுதலுக்கு இலக்காகிறான். இதே வாழ்க்கைச் சக்கரம் மீண்டும் மீண்டும் தொடருகிறது. வயிற்றுளைவு தோன்றுகிறது! எனவே தான் அமீபிக் வயிற்றுளைவு ஒருதருக்குத் தொற்றிவிட்டால் அதை இலேசில் மாற்ற முடிவதில்லை. இலங்கையிலுள்ள ஒவ்வொரு ஐந்து பேருக்குள்ளும் ஒவ்வொருதருக்கு அமீபிக் வயிற்றுளைவு உண்டு என்று கணக்கிட்டிருக்கிறார்கள் இந்த ஒரு ஐந்து பேர்க் குழுவில், ஏனைய நாலு பேரின் சுமையையும் தன் தலையில் ஏந்தி, தன் குடலில் அமீபாக் கிருமிகளைத் தாங்கி நிற்கும் தியாக சிந்தை இந்தக் கட்டுரை எழுதும் ஆத்மாவுக்கும் உண்டு!

### வாழ்க்கைச் சக்கரத்தை அறிந்தால்......


நோய்க் கிருமிகளின் வாழ்க்கைச் சக்கரங்களை ஆராய்ந்து பிடிப்பது வைத்திய ஆராய்ச்சித் துறையில் ஒரு முக்கிய அங்கமாகும். ஒரு கிருமியின் வாழ்க்கைச் சக்கரத்தை அறிந்தால் அக்கிருமி விளைவிக்கும் நோயை மடக்க வைத்திய ஆராய்ச்சியாளர் வழிவகுக்க முடியும். இவ்வழிகள் (1) நோய்த் தடுப்பு முறைகளாக இருக்கலாம்: அல்லது (2) குணப்படுத்து முறைகளாக இருக்கலாம். உதாரணமாக அமீபாவின் வாழ்க்கைச் சக்கர அங்கத்தில் கூடு நிலையில் படம் (இ) இக்கிருமியைத் தாக்க முனைவது வியர்த்தமானது. தனக்கு மிக ஆபத்தானதென்ற நிலையில் மிகக் கூடுதலான—தடித்த—பாதுகாப்பை அமீபா மேற்கொண்டிருக்கும் நிலை இது. குடலுள் இருந்து பெருகிக் கொண்டிருக்கும் நிலையில் தான் அமீபா கால் நீட்டிக் கவலையற்றுப் பயமற்ற வாழ்க்கை வாழுகிறது. படம் (ஆ) அமீபாவை எதிர்ப்பதற்கு ஏற்ற தருணம் இதுதான். என்ரரோவயபோம் (Enteroviotorm) போன்ற மருந்துகளாலும் குடல் கழுவுதன் மூலமாகவும் இந்த அங்கத்தில் வைத்தியர்கள் குணப்படுத்து முறைகளைப் பிரயோகிக்கிறார்கள். ஆனால் இங்கேயும் குடலின் மடிப்புக்களுள் ஒழித்திருந்து அமீபாக்கிருமிகள் மீண்டும் நோயைக் கொண்டு வருகின்றன. அமீபிக் வயிற்றுளைவு இலேசில் மாற்றக் கூடிய ஒன்று அல்லவே அல்ல!

### ஒரே வழி

அமீபாவின் வாழ்க்கைச் சக்கரத்தை அறிந்ததன் மூலம் அமீபிக் வயிற்றுளைவை எதிர்த்து நோய்த்தடுப்பு வழிகளில் போராட ஒரு வழி தெளிவு. இடது கையிலிருந்து வாய்க்குள் நுழையும் அங்கத்தில் அமீபாவின் (வாழ்க்கைச்) சக்கரத்தைத் (படத்திலுள்ள அம்புக்குறிகள்) கைகளில் ஒட்டியிருந்து மீண்டும் உணவுடன் உட்செல்லாதவாறு, ஒவ்வொருதடவையும் உடனுக்குடன் இடது கையைச் சவர்க்காரம் பாவித்துத் துப்பரவாக்குவதன் மூலம் அமீபாவின் வாழ்க்கைச் சக்கரத்தை ஒரளவு முறிக்கலாம். (சொந்த அனுபவத்தில் இதுவும் பயனளித்ததில்லை!) ஒரு தடவை குடலுக்குள் நுழைந்த அமீபாக் கிருமிகள் கழிவுப் பொருட்களுடன் வெளியேறும் பொழுது, படையெடுத்த கிருமிகள் அனைத்தும் வெளியேறுவதில்லையே. தங்கியிருப்பவர்கள் மீண்டும் பெருகிப் படர்வார்கள். அத்துடன் நோயாளி மாத்திரம் கைகழுவிப் பயன் என்ன? உணவு தயாரிப்பவர்களும் இதே தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் இவர்கள் மூலமும் படையெடுப்பு மீளலாம். பட்டினங்களில் தனிமையில் வாழ்ந்து கடைகளில் கூடிச் சாப்பிடும் அமீபிக் வயிற்றுளைவுக்காரர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்!

அமீபாக் கிருமிகள் குடலுக்குள் இருக்கும் வரை “நித்தம் சாவாருக்கு நித்தம் அழுவாருண்டோ” என்று அடிவயிற்றை அமத்திக் கொண்டிருந்து விடலாம். ஆனால் இவை குடலை விட்டுப் புறப்பட்டு இங்கிருந்து கல்லீரலுக்குப் போகும் இரத்தக் குளாய்களுக்குள் நுழைந்துவிட்டால் வந்தது ஆபத்து. கல்லீரலை அடைந்ததும் ஈரலை அரித்து புண் ஏற்பட்டு மரணத்திலும் முடியலாம்—அமீபிக் விளையாட்டு!

(அடுத்த வாரம் மலேரியாக் கிருமிகள்)




அ. வளர்ச்சி பெற்ற அமீபா
ஆ. இ. இரு-துகள்-பெருக்க முறையின் அங்கங்கள்
ஈ. இரு அமீபாக் குஞ்சுகள்
க. பாதகமான சூழ்நிலையில் அழிவை வெற்றி கொள்ள பல—துகள்—பெருக்கு வழி.
ச. ஒரே ஒரு பிலாஸ் மோடிய உயிரணுவிலிருந்து தோவறிய பல பிலாஸ் மோடிக் குஞ்சுகள். ஆயிரக் கணக்கில் பிலாஸ் மோடிய உயிரணுக்கள் உடலுள் நுழைந்தால், எத்துணை வேகத்தில் இரத்தம் நஞ்சூட்டப்படுகிறது என்பதை ஊகித்துக்கொள்ளலாம்.

(படத்தில் காணப்பட்டது ஸ்போறஸோயிற் நிலை)—

### என்ன பிரயோசனம்?

ஒருவன்:- டேய்! அன்று நடந்த சம்பவம் ஏதாவது தெரியுமா? நான் எல்லாத்தையுமே பாத்தேன்டா ......

மற்றவன்:-எனக்கு ஒன்றுமே தெரியாதுடா......
...என்னடா நடந்திச்சி......... சொல்லண்டா........என்ன தான் நடந்திச்சி...

முதலவன்:-தெரியாத உனக்கு அதச் சொல்லி என்ன பிரயோசனம். போடா...... போ......!



## வாழ்க்கையின் சின்னம்! வாழ்வின் புத்துயிர்!!

ரிஷி கருணைக்கிழங்கு லேகியம் மூல வியாதியையும், மலச் சிக்கலையும் ஒரே வேளையில் போக்கும் உயர்தர மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.

இதற்கு அத்தாட்சியாக கீழே குறிப்பிடும் நற்சாட்சியை வாசியுங்கள்.

Aynr. Dr. T. H. மதுரநாயகம் — கதிர்காமம்,
வைத்தியராஜ் M/s T. D. மதுரநாயகம் & கோ., — 12-4-1962
ஞானசுந்தர வைத்தியசாலை,
கொழும்பு.

ஐயா,

இன்று எனக்கு 85 வயதாகிறது. நான் கடந்த 55—60 வருடகாலமாய் ஞானசுந்தர வைத்தியசாலையில் பலவிதமான வியாதிகளுக்கு வைத்தியமும் செய்து, பலவித தயாரிப்பு மருந்துக்களும் வாங்கிச் சாப்பிட்டிருக்கிறேன். பூரண சுகமடைந்திருக்கிறேன். முக்கியமாகத் தங்களின் கருணைக்கிழங்கு லேகியம், ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம். ரிஷி சாலா மிஸ்ரி லேகியம் மிகவும் கை கண்டது.



ஸ்ரீங்கனம்
லெச்சுமணன் சாமியார்

‘மூலம்’ எல்லா சனங்களுக்கும் இருப்பினும் அதனை மூல வியாதி என்று சொல்ல முடியாது. ஆகார வேற்றுமையினாலும், செய்கையினாலும் மூலம் பிரகோபித்து வியாதியாக மாறுகின்றது. ரிஷி லேகியத்தைச் சாப்பிட்டு வந்தால் 9 வகையான மூல ரோகங்களும் அவற்றால் ஏற்படும் இதர உபாதைகளும் பூரணமாகத் தீரும்.

**30 நாள் மருந்து விலை ரூ. 5-75**
**15 நாள் மருந்து விலை ரூ. 3-00**

தபால் பாக்கிங் செலவு -/95 சதம்.

## ஞானசுந்தர வைத்தியசாலை,
## T. D. மதுரநாயகம் & கோ,

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

விபரமடங்கிய கெட்லாக் இனமாக அனுப்பப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் தெருக்களில் தமிழர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்

## இலங்கை ஆட்சியாளரின் அடக்குமுறை பேயாட்டத்தை எதிர்த்துக் கிளர்ச்சி

[நமது லண்டன் நிருபர்]

இலங்கை அரசாங்கம் அவசர காலச் சட்டத்தைத் திடீரெனப் பிரகடனப்படுத்தி, தமிழரசுக் கட்சியைத் தடை செய்து, தலைவர்களைச் சிறையில் தள்ளி மக்கள் மீது ராணுவத்தை ஏவி விட்டு அட்டகாசங்கள் புரிந்து பேயாட்டம் ஆடியபோது அந்த அடக்குமுறையை எதிர்த்து லண்டன் வாழ் இலங்கைத் தமிழர்கள் லண்டன் தெருக்களிலே ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதன் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.



இலங்கையில் கடந்த வருடம் அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப் பட்டு, தமிழ் தலைவர்கள் கைது செய்யப்பட்டதை ஆட்சேபிக்கும் முகமாக லண்டன் வாழ் தமிழர்கள் நடத்திய ஒரு கண்டன ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களின் ஒரு பகுதி.

சென்ற வருடம் (17-4-61) இலங்கையில் அவசர காலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்ட செய்தியை வானொலி மூலமாக அறிந்த போது, லண்டன் தமிழர்கள் கொதித்து எழும்பினர். அரசாங்கம் அவசரக் காலச் சட்டம் பிரகடனம் செய்து, தமிழ் பேசும் மக்களின் தலைவர்களையும், தொண்டர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் தடுப்புக் காவலில் தள்ளியதையும், தமிழ் பேசும் மாகாணங்களில் தொடர்ந்து 48 மணித்தியாலங்களுக்கு ஊரடங்குச் சட்டத்தை அமுலுக்கு கொண்டுவந்ததையும், பத்திரிகைகளைத் தணிக்கை செய்ததையும் பட்டாளம் தமிழ் பேசும் மக்களுக்குச் செய்த அட்டூழியங்களையும், கண்டித்து, ஏகோபித்த குரலை எழுப்பினர் லண்டன் தமிழர்கள். மேலும், அவர்கள், தமிழ் பேசும் மக்கள் மீது, ஆட்சியாளர் மிருகத் தனமான அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்ட செய்தியையும் உலக மக்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

அவசர காலச் சட்டத்தின் போது, தமிழ்த் தலைவர்கள், தொண்டர்களின் குரலை பலவந்தமாக ஆட்சியாளர் அடக்கி வந்த சமயத்தில் லண்டன் தமிழர்கள், அடிக்கடி இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்திற்காக உரிமைக் குரலை எழுப்பி வந்தனர். இதன் விளைவாக, இந்நாட்டிலுள்ள (லண்டனிலுள்ள) பல பத்திரிகைகளும் ஆட்சியாளரின் அடக்கு முறையைக் கண்டித்து குரல் எழுப்பின.

### ஊர்வலத்தில் வீராங்கனைகள்

22—4—61 சனிக்கிழமை பிற்பகல் 2 மணியிலிருந்து 5 மணி வரைக்கும் சுமார் 200 லண்டன் தமிழர்கள் (பெண்மணிகள் உட்பட) சுலோகங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகளைத் தாங்கி லண்டன் மாநகரத்திலே ஓர் மாபெரும் ஊர்வலத்தை நடாத்தினர். இலங்கை அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டிப்பதற்காகவும், ஊரடங்குச் சட்டத்தின் போது காலஞ் சென்ற தியாகிக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவுமே இந்த ஊர்வல அணிவகுப்பு நடத்தப்பட்டது.

கண்ணகியின் பரம்பரையில் வழிவந்த வீரத் தமிழ்ப் பெண்மணிகள் கொட்டும் மழையையும் பாராமல், ஓர் பெரிய மலர்வளையத்துடன், "உச்சி மீது வானிடிந்து வீழ்ந்திடினும் அச்சம் இல்லை" என்ற நோக்கத்திற் கிணங்க வீரநடை போட்டு ஊர்வல அணிவகுப்பில் வழிகாட்டியாக முன் சென்றனர். வீர உணர்ச்சியால், ஓர் தாய், கையிலேந்தி வந்த தனது குழந்தை (இரண்டு வயது) மழையில் நனைந்து வருவதையும் பொருட்படுத்தாமல்; மற்றும் பெண்மணிகளுடன் அணிவகுப்பில் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, லண்டன் தமிழ்ப் பெண்மணிகள் செய்த வீரச் செயலைப் பார்த்தபோது, தமிழ் பேசும் இனத்திற்கு விமோசனம் கூடிய விரைவில் கிடைக்குமென்றே தோன்றிற்று. ஊர்வலத்தின் போது, இலங்கையின் அவசர காலச் சட்டம் 1961 (CEYLON EMERGENCY, 1961) என்ற தலையங்கம் தீட்டிய துண்டுப் பிரசுரங்கள், லண்டன் மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

ஊர்வலம், லண்டனிலுள்ள இலங்கைத் தூதுவர் காரியாலத்தை அடைந்தவுடன், இலங்கைத் தமிழர் வெளிநாட்டுச் சங்க நிர்வாகக் குழுவினர் இலங்கைத் தூதுவருக்கென தயாரிக்கப்பட்டுள்ள கண்டனக் கடிதத்தை, அவரிடம் சமர்ப்பிக்கச் சென்றபோது காரியாலயம் பூட்டப்பட்டிருந்தமையால், கடிதத்தை காரியாலயத்தபால் பெட்டிக்குள் போட்டுவிட்டுத் திரும்பினர்.

ஊர்வலத்தின் போது, கொண்டு செல்லப்பட்ட மலர்வளையத்தை, யுத்தத்தின் போது தியாகஞ் செய்துள்ள ஆங்கில போர் வீரனின் ஞாபகத்திற்காகக் கட்டப்பட்ட சிலைக்கு, முன்னால் வைத்து அஞ்சலி செலுத்தினர்.




லண்டனில் நடந்த கண்டன ஊர்வலத்தின் முன்னணியில் சென்ற பெண்மணிகளின் ஒரு பகுதியை இப்படத்தில் காணலாம்.

### நாய்களுக்கு விடுதலை

ஒல்லாந்தில் பழங்காலம் தொடக்கம் நாய்கள் பூட்டிய வண்டிகள் பாவிக்கப்பட்டு வந்தன. இந்த நாய் வண்டிகளைத் தடைசெய்யும் சட்டம் ஒன்று அரசி ஜூலியானாவால் கொண்டுவரப்பட்டுள்ளது.

1955-க்கு முன்னர் மொத்தம் 50,000 நாய் வண்டிகள் இருந்து வந்தன. அவை மெல்ல மெல்லக் குறைக்கப்பட்டு கடந்த வருடம் 100 வண்டிகள் மட்டுமே பாவனைக்கு இருந்தன. அவைகளும் இனிமேல் இராது.

காவலுக்காகப் பண்ணைகளில் எப்போதும் கட்டி வைக்கப்பட்டிருக்கும் 50,000 மேற்பட்ட நாய்களுக்கும் விடுதலை அளிக்கவும் கிளர்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. வாயில்லாத இந்த ஜீவன்களுக்கு ஓய்வும் சுதந்திரமும் அளிக்க வேண்டுமென்பதே இதன் நோக்கமாகும்.

நம்பிக்கையான
நைலோன்

வலைகளுக்கும், நூல்களுக்கும்
சேகரம் அன் சன்ஸ்
74, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம.
தொலைபேசி: 693
தந்தி: சேகரன்.

கமலா பீடி
ஒளியில் சிறந்தது
சூரியப் பிரகாசம்
பீடியில் சிறந்தது கமலா பீடியே!
ஒரு முறை வாங்கி உபயோகித்தால்
அதன் உண்மை விளங்கும்.
கமலா ஸ்டோர்ஸ்,
நிர். 15, செட்டியார் தெரு,
கொழும்பு 11.
தந்தி: "கமலா"
போன்: 3597—6522.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1962 ஜூன் மாதம் 10-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# வெந்த புண்ணிலே வேல்

வெந்த புண்ணிலே வேலைச் செருகியிருக்கிறார் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மந்திரிகளில் ஒருவர்.

மந்திரி திரு. மகாநாம சமரவீர சென்ற வாரம் வட பகுதிக்கு விஜயம் செய்தார். ராணுவக் கெடுபிடிக்குப் பிறகும் தமிழ் பேசும் மக்கள் எதிர்ப்புக்காட்டுகிறார்களா? ஹர்தாலில் கலந்து கொள்ளும் அளவுக்கு அவர்களுக்கு இன்னும் துணிச்சல் இருக்கிறதா! என்பதை நோட்டம் பார்க்க வந்தவரைப் போலவே அவர் வந்து சென்றார். இப் "புனித யாத்திரை"யின் போது மந்திரி திரு. சமரவீர சிங்களவர்—தமிழர் சகோதரத்துவத்தைப் பற்றி இனிக்க இனிக்கப் பேசியிருக்கிறார்.

தனிப்பட்ட மனிதர் என்ற முறையில் அவர் தமிழ்ப் பிரதேசத்துக்கு வருவதாயின், அவரது வருகையை எவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். விருந்தினர்களைக் களிப்புடன் வரவேற்று உபசரிக்கும் பண்பு கொண்டவர்கள் தான் தமிழ் பேசும் மக்கள். திரு. சமரவீராவோ சிங்கள அரசாங்கத்தின் ஒரு மந்திரி. தமிழ் பேசும் மக்களைக் கொத்தடிமைகளாக்கும் அரசாங்கத்தின் பிரதிநிதி-ஆட்சியாளரின் பிரதிபிம்பம். மந்திரிகளின் வருகையை ஆட்சேபிப்பதற்கு அதுதான் காரணம். இந்த அரசாங்கத்தின் பிரதிநிதிகள் தமிழ் பிராந்தியங்களுக்கு வருவதே ஒரு வெட்கக் கேடான செயல். எந்த மக்களின் மனித உரிமைகளைப் பறித்தார்களோ, அந்த மக்களின் முகத்தில் விழிப்பதற்கு இந்த மந்திரிகளுக்கு எப்படித்தான் துணிச்சல் வந்ததோ! திரு. மகாநாம, மந்திரி என்ற முறையில் தமிழ் பகுதிக்கு விஜயம் செய்ததே ஒரு தவறு. அடிமைகளைப் பார்வையிட அடிமை எஜமானர் வந்ததைப் போலிருந்தது அவரது விஜயம் அத்தகைய இழி நிலையைத் தமிழ் பேசும் மக்கள் சகிக்க மாட்டார்கள். அவர்களின் சுதந்திர உணர்ச்சி வற்றிப் போய் சரணாகதி அடைந்து விட்டார்களென மந்திரி கருதி விட்டார் போலும்! இல்லையேல் போரில் வெற்றிக்கொடி நாட்டிய மன்னர் வெற்றி பெற்ற பிரதேசத்தில் திக்விஜயம் செய்வதைப் போல அவர் வந்து போவாரா? மந்திரியின் வருகையைத் தமிழ் பேசும் மக்கள் பகிஷ்கரித்தனர். கறுப்புக் கொடியேற்றி ஆட்சேபித்தனர். இது சமரவீரா என்ற தனிப்பட்ட நபருக்குக் காட்டிய எதிர்ப்பன்று—அவர் பிரதிநிதித்துவம் தாங்கும் அரசாங்கத்துக்குக் காட்டிய எதிர்ப்பே.

வடபகுதிக்கு வந்தால் தேனொழுகப் பேசும் மந்திரிகள் தெற்கே திரும்பிவிட்டால் வகுப்பு வாத விஷத்தைக் கக்கத் தொடங்கிவிடுகிறார்கள். வடக்கே சகோதரபாசம் பற்றிய பேச்சு—தெற்கே சகோதரனைக் கழுத்தறுக்கும் சதி. இது ஒரு விலாங்கு வித்தை. மந்திரிகளின் மாய்மாலப் பேச்சுக்கு மயங்கிவிடுபவர்களல்ல தமிழ் பேசும் மக்கள்.

மந்திரி சபை கூட்டுப் பொறுப்புள்ளது. மந்திரிகள் வெளியிடும் கருத்து மந்திரி சபையின் கருத்தையே பிரதிபலிக்கும். மந்திரி திரு. சமரவீரா வட பகுதியில் பேசிய பேச்சும் அரசாங்கத்தின் கொள்கையைத்தான் பிரதிபலிக்க முடியும். சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே ஐக்கியத்தை வளர்க்க சிறிமாவோ அரசாங்கம் எல்லாவித நடவடிக்கையும் எடுக்கு மென்று மந்திரி உறுதியளித்துள்ளார். இது அரசாங்கத்தின் கொள்கையா? அப்படியானால் ஐக்கியத்தை வளர்க்கும் பொருட்டு எடுக்கப்படும்—இது வரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை? தமிழ் மொழியைப் புறக்கணித்தல், சிங்களத்தைத் துப்பாக்கிச் சனியனைக் கொண்டு தமிழ் பேசும் மக்களின் தொண்டைக்குள் திணித்தல், தமிழ் பிரதேசங்களை படிப்படியாக ஆக்கிரமித்தல், குடியுரிமை, வாக்குரிமைகளைப் பறித்துக் கடைசியில் தொழில் செய்யும் உரிமைக்கும் வேட்டுவைத்தல், ராணுவத்தை ஏவி தமிழ் பேசும் மக்களைச் சித்திரவதை செய்தல், தமிழ்ப் பிராந்தியங்களையும் தமிழ் பேசும் மக்களையும், கலை கலாசாரம் அத்தனையும் சிங்களமயமாக்கி தமிழ் பேசும் இனத்தை அழித்தல், கொடிய வகுப்புவாத விஷத்தைக் கக்கி சிங்களவர்—தமிழர்களை மோத விடுதல்; இவைகள் தானா ஐக்கியம் வளர்ப்பதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகள்? வல்வெட்டித் துறையில் மந்திரி திறந்து வைத்த சிவன் கோவில் பாதை ஐக்கியத்தை ஏற்படுத்தும் பாதை என்று அவர் வர்ணித்துள்ளார். இரு இனங்களின் ஐக்கியத்துக்கு மந்திரி கண்டுபிடித்த வழி இதுதானா? எல்லாம் பாசாங்குப் பேச்சு—பசப்பு வார்த்தை. நெஞ்சிலே துரோகம்—நாவிலே தேன் சொட்டும் சொல். இந்தப் பொம்மலாட்டத்தைத் தமிழ் பேசும் மக்கள் அறிவர்.

பலத்த பொலிஸ் பந்தோபஸ்துடன்தான் மந்திரி வட பகுதியில் நடமாட முடிந்தது. சொந்த இனத்தையே காட்டிக் கொடுக்கும் ஒரு காக்கைவன்னியர் கூட்டம் அவரைச் சூழ்ந்து நின்று ஆரத்தி எடுத்து ஆலவட்டம் வீசியது. இதைப் பார்த்து மகிழ்ந்த மந்திரியும் "இது சிறிமாவோ அரசாங்கத்துக்கு அளித்த வரவேற்பாகவே கருது கிறேன்" என்று கூறினாராம். என்ன மாய்மாலப் பேச்சு! ராணுவத்தினரால் அடித்து நொறுக்கப்பட்ட தமிழ் பேசும் மக்கள் அரசாங்கத்துக்கு வரவேற்பு மட்டுமா அளிப்பார்கள்? ஒரு சுயநலக் கும்பல் அளித்த "வரவேற்பு நாடகத்தை" மக்கள் வரவேற்பு என்று கூறுவதா? அந்தக் கும்பல் யார்? எச்சிலையில் எஞ்சியுள்ள இரண்டொரு பருக்கைகளுக்காகச் சொந்த சகோதரர்களையே காட்டிக் கொடுக்கும் எட்டப்பர் கூட்டம். அடிமை மனப்பான்மையில் ஊறிப் போனவர்கள். தன்மானமற்ற கோழைகள். சுதந்திர உணச்சியே இல்லாதவர்கள். தாய் மொழிக்குத் துரோகம் செய்தவர்கள். தமிழர்களின் கலை கலாசாரம் பண்பாடு ஆகியவைகளுக்குக் குழி பறித்தவர் சுயநலத்துக்காக தமிழ் பேசும் மக்களை விலை கூறி விற்பவர்கள். அவர்களின் முயற்சியெல்லாம் உதைக்கும் காலை முத்தமிட்டாவது பட்டம் பதவிகளைப் பெற்று பவிசுடன் வாழ வேண்டுமென்பதே. இதில் ஆச்சரியமெதுவும் இல்லை. எந்த இனத்திலும் சொந்த மக்களுக்கே குழி தோண்டும் ஒரு துரோகக் கும்பல் இருப்பதுண்டு. மக்கள் எழுச்சி பெற்றால் இக் கும்பல் புறமுதுகிட்டோடிவிடும். இது சரித்திரம் கற்பிக்கும் உண்மை. இந்த அடிவருடிகளின் உதவியைக் கொண்டுதான் மந்திரிகள் தமிழ் பிரதேசத்தில் திக் விஜயம் செய்யப் புறப்பட்டுவிடுகிறார்கள். தங்களின் உரிமைகளை நசுக்கும் அரசாங்கத்தின் பிரதிநிதிகள்தான் மந்திரிகள், என்பது தமிழ் பேசும் மக்களுக்குத் தெரியும். ஆதலின் அவர்கள் மந்திரிகளின் வருகையை விரும்பவில்லை. பகிஷ்காரம் செய்கிறார்கள். வெறுக்கிறார்கள். வரவேண்டாமென்கிறார்கள். ஆனால், மந்திரிகளோ எட்டப்பர் கூட்டம் புடைசூழ, பொலிஸாரும் ராணுவமும் பாதுகாப்பளிக்க, வெற்றி வீரர்களைப் போல தமிழ்ப் பகுதிகளுக்கு வருகிறார்கள். வெந்த புண்ணிலே வேலைச் செருகிவிட்டுத் திரும்பிச் செல்கிறார்கள். இச் செய்கை அவர்களின் ஆணவத்தையும் திமிரையுந்தான் எடுத்துக் காட்டுகிறது. தமிழ் பேசும் மக்களை மாக்களென்று நினைத்து விட்டார்கள் போலும்!

மந்திரிகளுக்கு ஒரு வார்த்தை: தமிழ் பேசும் மக்கள் கோழைகளல்ல—துணிச்சல் மிகுந்தவர்கள். அடிமை மனப்பான்மை கொண்டவர்களல்ல—வீர சுதந்திரம் வேண்டி நிற்பவர்கள். மானத்தைவிலை கூறுபவர்களல்ல—தன்மான உணர்ச்சியுள்ளவர்கள். உறங்கிக் கிடக்கும் சோம்பேறிகளல்ல—விழிப்புஉணர்ச்சி கொண்ட தீரர்கள். அடக்குமுறைக்கு அஞ்சி பதுங்குகிறவர்களல்ல—இறுதி மூச்சுள்ளவரை உரிமைப்போரை நடத்துகிறவர்கள். அத்தகைய மக்கள் தங்களின் உரிமைகளுக்கு உலை வைத்தவர்களைக் கைகூப்பி வரவேற்பார்களென்று எதிர்பார்த்து ஏமாற வேண்டாமென மந்திரிகளை எச்சரிக்கிறோம்.

மந்திரிகள் வட பகுதிக்கு வந்து அள்ளி வீசும் வாக்குறுதிகளை மக்கள் நம்பவே கூடாது. மந்திரிகளின் வாக்குறுதி ஒரு மண் குதிரை. நமது பிரச்னை அரசியற் பிரச்னை. அரசியல் ரீதியில்தான் அரசியற் பிரச்னைக்குத் தீர்வுகாண முடியும். வாக்குறுதிகளால் அல்ல.

# உடனடி நடவடிக்கை இன்றேல் மசோதா சட்டமாகிவிடும்

## ஆபத்து வரமுன்பு அணைகட்ட அனைவரும் ஒன்று கூடுக

குதிரை கீழே தள்ளியதுடன் குழியையும் பறித்ததாம். அம்மாதிரி இந்த அரசாங்கம் மலைநாட்டுத் தமிழர்களின் ஜீவாதாரமான உரிமைகளையெல்லாம் பறித்தது போதாதென்று கடைசியில் அவர்களின் தொழிற் செய்யும் உரிமையையும் பறிக்க மசோதா கொண்டுவந்துள்ளது.

"இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் பொருளாதார, அரசியல் அந்தஸ்தை அழிப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளில் இந்த மசோதாவும் ஒன்று" என்று தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் விடுத்துள்ள ஓர் அறிக்கையிற் சரியாக குறிப்பிட்டுள்ளார்.

தோட்டங்களில் இலங்கைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும்படி தோட்ட முதலாளிகளை நிர்ப்பந்திக்கும் மசோதா ஒன்று பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த மசோதா எவ்வளவு பயங்கரமானது என்பதைத் திரு. செல்வநாயகம் தமது அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளார்.

மலைநாட்டுத் தமிழ் மக்கள் பிரஜாவுரிமை இழந்தனர். வாக்குரிமை இழந்தனர். "நாடற்றவர்கள்" என்னும் திரிசங்கு சுவர்க்கத்துக்குத் தள்ளப்பட்டனர், தோட்டங்களுக்கு வெளியே சென்று வேலை செய்யும் சந்தர்ப்பங்களை இழந்தனர். தங்களின் பிள்ளைகளுக்கு அரசாங்கப் பாடசாலைகளில் தாய் மொழியிற் கல்வி கற்பிக்கும் வசதிகளை இழந்தனர். பொருளாதாரத்துறையினும் இழி நிலைக்குத் தள்ளப்பட்டனர். 1952 முதல் இன்றுவரை சம்பள உயர்வு இல்லை. எல்லோருக்கும் வழங்கும் ரூபா 17.50 விசேட அலவன்ஸ் கூட அவர்களுக்கு இல்லை.

### படுபாதக மசோதா

இந்த அநீதிகளுக்கெல்லாம் சிகரம் வைத்ததைப் போல தோட்டங்களில் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய வேலை வாய்ப்புக்களையும் தடை செய்வதற்கு இப்பொழுது அரசாங்கம் ஒரு மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறது. இது ஒரு படுபாதக மசோதா. மலைநாட்டுத் தமிழர்களைப் பட்டினி போட்டுக் கொல்லும் மசோதா. தமிழ் வாலிபர்களை வாழ்க்கை பூராவும் வேலையின்றித் தவிக்க வைக்கும் மசோதா கடைசியாக மலைநாட்டுத் தமிழர்களிடம் எஞ்சியிருந்த தொழில் செய்யும் உரிமையையும் பறிக்கும் மசோதா.

ஏற்கனவே இயற்றப்பட்ட சட்டங்கள் அவர்களை அரசியல் அனாதைகளாக்கின. இந்த மசோதாவோ அவர்களைப் பஞ்சைகளாக்கிவிடும். ஆகையால்தான் தமிழரசுத் தந்தை கூறுகின்றார் . அன்று அரசியல் அந்தஸ்து பறிபோயிற்று—இன்று பொருளாதார அந்தஸ்தும் பறிபோகிறதென்று.

### அதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்?

மசோதாவில் இலங்கைத் தொழிலாளர் என்று குறிப்பிடப்பட்டிருப்பது "சிங்களத் தொழிலாளர்களைத்தான் என்பதைத்

## மலை நாட்டுத் தமிழர்களை வெளியேற்றத் திட்டம்

திரு. செல்வநாயகம் தமது அறிக்கையில் அம்பலப்படுத்தியுள்ளார். தோட்டங்களில் வேலை வாய்ப்புகளொன்றும் அதிகமாயில்லை. ஓரளவுதான் உண்டு. கிடைக்கும் அந்த ஒருசில வேலைகளையும் தோட்டங்களிலே பிறந்து வளர்ந்து. தோட்ட வேலைகளில் பரிச்சயமுள்ள தமிழ் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டாம், அதையும் சிங்களத் தொழிலாளர்களுக்கே கொடு என்று சட்டம் செய்யப் போகிறார்கள்.

இது மனிதப் பண்புள்ள ஒரு ஜனநாயக நாடு செய்யக் கூடிய சட்டமா! ஹிட்லர் யூத இனத்திடம் பழி வாங்கியதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்?

தோட்டங்களிலுள்ள வேலைவாய்ப்புகளையும் இழந்து விட்டால் மலை நாட்டுத் தமிழர்களுக்கு வேறு என்னதான் இருக்கிறது? அவர்களின் ஊசலாடும் உயிரை உடலோடு பிணைத்துக்கொள்வதற்கிருந்த ஒரே தொழில் அது ஒன்றுதானே! அதையும் அவர்கள் இழந்து விட்டால் தமிழரசுத் தந்தை கூறுவதைப் போல அவர்கள் ஓட்டாண்டிகளாக தெருவிலே இறங்க வேண்டியதுதான். இனி மலைநாட்டுத் தமிழர்கள் பிச்சா பாத்திரம் தாங்கி நடுத் தெரு நாராயணர்களாக அலைந்து திரிய வேண்டியதுதானா? இப்படியாஓர் இனத்தின் வயிற்றில் அடிப்பது?

### செய்த குற்றமென்ன?

அவர்கள் கல்வி அறிவைப் பெறும் வசதிகளையும் தடை செய்த அரசாங்கம் இப்பொழுது அவர்களைப் பட்டினிபோடவும் முயற்சிசெய்கிறதென்றால், அதனைத் தமிழ் பேசும் மக்கள் சகித்துக் கொண்டிருப்பார்களா?

மலைநாட்டுத் தமிழர்களை இந்தக் கொடுமைகளுக்கு ஆளாக்குவதற்கு அவர்கள் செய்த குற்றந்தான் என்ன? இரத்த வியர்வை சிந்தப் பாடுபட்டு மலைநாட்டைப் பொன் கொழிக்கும் பூமியாக மாற்றியது குற்றமா? உழைத்து உழைத்து ஓடாகப் போகும்வரை இலங்கைத் தேசிய வருமானத்தின் பெரும் பகுதியைச் சம்பாதித்துக் கொடுப்பது குற்றமா? அல்லது தமிழர்களாகப் பிறந்ததுதான் குற்றமா?

### பிளவு படுத்தும் முயற்சி

இம் மசோதா தொழிலாளர் வர்க்க அணியில் பிளவை ஏற்படுத்தும். சிங்களத் தொழிலாளர்களைத் தமிழ்த் தொழிலாளர்களுடன் மோதவிடும். வகுப்புவாத வெறியை வளர்த்து தொழிலாளரிடையே அமைதியின்மையை ஏற்படுத்தும்,

தொழிலாளரின் பலம் அவர்களின் ஐக்கியத்தில் தான் தங்கியிருக்கிறது. அந்த ஐக்கியத்தைச் சிதறடித்து விடும் இம்மசோதா. இதனால் முழுத் தொழிலாளர் வர்க்கமே வலுவிழந்து விடும். இந்த நிலைமையைத் தொழிற் சங்கங்கள் அனுமதிக்கப் போகின்றனவா?

### சர்வதேசச் சட்டங்களை மீறுதல்

தொழிலாளர்களின் உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்குச் சர்வதேசிய தொழில் ஸ்தாபனம் எத்தனையே விதிகளை இயற்றியுள்ளது. அத்தனை விதிகளையும் மீறி தோட்டத் தமிழ் மக்களுக்கு அநீதி செய்வதில் முன்னணியில் நிற்கிறது இந்த அரசாங்கம். ஆனால் இந்த அரசாங்கம் அந்த ஸ்தாபனத்தில் அங்கத்தினராகவும் இருக்கிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்தல ஸ்தாபன தேர்தல்களில் போட்டியிட

## ஆசிரியர்களுக்கு உரிமை

## கல்வி மந்திரியின் கருத்து

## ஏனைய மந்திரிகளின் எதிர்ப்பு

### மந்திரி சபைக்கு வரவிருக்கும் பிரச்னை

**ஆசிரியர்களுக்கு ஓரளவு அரசியல் உரிமைகளை வழங்க வேண்டுமென்பது கல்வி மந்திரி ஐனுப் பதியுதீன் மாமூத்தின் கருத்து. இதனால் இதர அரசாங்க ஊழியர்களின் சங்கங்களும் அரசியல் உரிமைகோரி கிளர்ச்சி செய்யுமென்று வேறு சில மந்திரிகள் இக் கருத்தை எதிர்க்கின்றனர். விரைவில் இப் பிரச்னை மந்திரி சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்படுமெனத் தெரிகிறது.**

மாநகரசபை, நகரசபை, பட்டினசபை, கிராமச் சங்கம் ஆகிய ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு ஆசிரியர்களை அனுமதிக்கலாமென்பது கல்வி மந்திரியின் கருத்து. இத் தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வி அடைந்தால் மீண்டும் ஆசிரியர் தொழிலைத் தொடர்ந்து நடத்த அவர்களை அனுமதிக்கவேண்டுமென்று கல்வி மந்திரி கருதுவதாகத் தெரிகிறது.

ஆனால் வேறு சில மந்திரிகள் இக் கருத்தை எதிர்க்கின்றனர். ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை ஓரளவு வழங்கினாலும் இதர அரசாங்க ஊழியர்களும் அதே உரிமை கோரிக் கிளர்ச்சி செய்வார்களென்றும், இது தூங்கும் சிங்கத்தைத் தட்டியெழுப்பும் செயலாகுமென்றும் அந்த மந்திரிகள் அபிப்பிராயப்படுகின்றனராம்.

இது சம்பந்தமாகக் கல்வி மந்திரி, மந்திரி சபையில் விரைவில் ஒரு தீர்மானத்தைச் சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அடக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடுகளை திரு. பி. மாணிக்கவாசகர் செய்திருந்தார்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும் பெரும்பாலான கடைகள் பூட்டப்பட்டும், கோயில்களில் விசேட பிரார்த்தனைகள் நடாத்தியும், கறுப்புக் கொடிகளைக் கட்டியும் மக்கள் துக்க தினம் அனுட்டித்தனர்.

## உடனடி நடவடிக்கை........

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள வகுப்புவாத அரசாங்கத்தின் தமிழினத்தை அழிக்கும் திட்டங்களில் இந்த மசோதாவும் ஒன்று. இன ஒழிப்பு நடவடிக்கைகளில் வட கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களென்றோ, மலைநாட்டுத் தமிழர்களென்றோ தனித் தனியாக அரசாங்கம் கருதுவதில்லை. அவர்கள் அனைவரும் ஓர் இனம் என்பது அரசாங்கத்துக்குத் தெரியும்.

### மற்றோர் உபாயம்

மலைநாட்டுத் தமிழர்களைத் தந்திரமாக "நாடற்றவர்கள்" என்னும் இரண்டும் கெட்டான் அந்தஸ்துகிகுத் தள்ளியுள்ள அரசாங்கம் அவர்களை அழிப்பதற்கு மற்றோர் உபாயத்தையும் கையாளப் போகிறதாம். பல்வேறு சூழ்ச்சிகளைக் கையாண்டு, அவர்களிற் பெருப் பாலோரை இந்தியப் பிரஜைகளாக்கி, இந்தியப் பிரதமருடனும் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தி, அவர்களை எவ்வகையிலாவது இந்தியாவுக்குக் கப்பலேற்றி விடுவதுதான் அந்த உபாயம். அதற்கான தீவிர ஏற்பாடுகள் நடைபெறுவதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

பெரிய சேனநாயக்கா பிரஜாவுரிமைச் சட்டம் இயற்றியது முதல் இதுவரை மலைநாட்டுத் தமிழர்களின் உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டன. இன்று எஞ்சியுள்ள உரிமைகளையும் பறிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இழந்த உரிமைகளை மீண்டும் பெற மலைநாட்டுத் தமிழர்களிடையே இயங்கும் காங்கிரஸ் ஸ்தாபனங்கள் இதுவரை திட்டவட்டமான, நேரடியான நடவடிக்கைகள் ஏதேனும் எடுத்ததுண்டா?

### காவடி எடுக்க வேண்டாம்

ஒவ்வொரு முறையும் உரிமைகளைப்பறிக்கும்பொழுது காங்கிரஸ் அறிக்கைகள் விடுவது, தீர்மானங்களை நிறைவேற்றுவது, கூட்டங்களில் பேசுவது முதலியவற்றோடு தனது நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டு வந்துள்ளது. திட்டவட்டமான எதிர்ப்பு காட்டப்படாததால் அரசாங்கமோ துணிச்சலுடன் ஒவ்வொரு உரிமையாகத் தொடர்ந்து பறித்துக் கொண்டிருக்கிறது. ஆதலின் அஹிம்சா முறையில் திட்டவட்டமான நடவடிக்கைகளில் மலை நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் இறங்கினாலன்றி இந்த "இன ஒழிப்பை"யும், "உரிமைக் கொள்ளை"யையும் தடுத்து நிறுத்த முடியாது. மகஜர் சமர்ப்பித்து காவடி தூக்கிக் காரியங்களைச் சாதிக்க முடியும் என்ற மனப்பான்மையைக் காங்கிரஸ் ஸ்தாபனங்கள் கைவிட்டுவிடவேண்டும்.

தமிழரசுத் தந்தை தமது வேண்டுகோளில் குறிப்பிட்டிருப்பதைப் போல காங்கிரஸ் ஸ்தாபனங்களும், தொழிற்சங்கங்களும் மலைநாட்டுத் தமிழ் மக்களின் நலன்களில் அக்கறை கொண்ட இதர ஸ்தாபனங்களும் ஒன்றுதிரண்டு சாத்வீக முறையில் உடனடியாக நடவடிக்கையில் இறங்கினாலன்றி, வேலை வாய்ப்புகளைத் தடை செய்யும் இந்தக் கொடிய மசோதாவைக் குழி தோண்டிப் புதைக்க முடியாது.

## அ. எ. வி. சங்க ஆண்டுக் கூட்டம்

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 9—6—62 சனிக்கிழமை நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது.

அரசகரும மொழிக் கொள்கையில் அரசாங்கம் பாரபட்சம் காட்டுவதை எதிர்த்தும், இக் கொள்கை காரணமாக பதவியிலிருந்து விலகுவோருக்கு வடகிழக்கு மாகாணங்களில் விவசாயக் குடியேற்றங்களில் குடியேற வசதி செய்தும், சிறுசிறு கைத்தொழில்களில் ஈடுபட வசதியாக இருக்கும் வகையில் கடனுதவிகள் செய்தும் அவர்களுக்கு ஆதரவு அளிக்கவும் அரசாங்கத்தை கேட்கும் தீர்மானங்களும் நிறைவேற்றப்படவுள்ளன.

இக் கூட்டத்தில் கடந்த ஆண்டறிக்கையும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## மூதூர் தமிழரசு அபேட்சகருக்கு இ. தி. மு. க. ஆதரவு

## ஒன்று சேர்ந்து பாடுபடத் தொண்டமானுக்கு வற்புறுத்து

**வட கிழக்கு மாகாண தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து திரு. தொண்டமான் ஒத்துழைத்து, தமிழ் பேசும் இனத்தின் விடுதலைக்காகப் பாடுபட வேண்டும். இல்லையேல், பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகிவிட வேண்டுமென்று இ. தி. மு. க. பொதுக் குழு வற்புறுத்தியுள்ளது.**

நாவலப்பிட்டியில் நடைபெற்ற இ.தி.மு.க. பொதுக் கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மூதூர் உபதேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடும் ஐனுப் முகம்மது அலியை ஆதரிப்பதெனவும் இக் குழு தீர்மானித்துள்ளது.

தி.மு.க. தொழிற் சங்கம் பொதுச் செயலாளர் திரு. இளஞ்செழியன் பேசுகையில், மலைநாட்டில் வாழும் 10 லட்சம் தமிழ் பேசும் தொழிலாளர்களின் நல உரிமைகளைப் பாதுகாக்க இ. தி. மு. க. அமைக்கவிருக்கும் தொழிற் சங்கமே வழி வகுக்கும் என்று கூறினார்.

பத்திரிகை மசோதாவைக் கண்டித்தும், நாடற்றவர் பிரச்னை தீரும்வரை இலங்கையரைத் தோட்டங்களில் வேலைக்கமர்த்தும் மசோதாவை அரசாங்கம் கைவிடவேண்டுமென்றும், நாடற்றவர் நாநாடு கூட்டுவதெனென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தோட்டத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு, சிறந்த முறையில் ஒரு பெரும் தொழிற் சங்கத்தை நிலவுவதெனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

மறைந்த தலைவர் திரு. கே. ஜி. எஸ். நாயருக்கும், பிரதமரின் தாயாரின் மறைவுக்கும் அனுதாபம் தெரிவுக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.


### எந்தச் சந்தர்ப்பத்திற்கும் எந்த இடத்திற்கும் எல்லோருக்கும் ஏற்ற சுருட்டுகள்...கனகலிங்கம்

நீங்கள் புகைக்கிறீர்களா? ஏன் புகைக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

புகை பிடிக்க வேண்டும் என்பதற்காகப் புகைக்கக் கூடாது. புகைப்பதினால் ஏற்படக்கூடிய நன்மைகளை அறிந்து புகைக்க வேண்டும். புகைப்பதினால்—சோம்பல், களைப்பு, சாப்பிட்டதும் ஏற்படக்கூடிய முட்டுத்தன்மை அகல்கிறது. இன்னும் புகைப்பிடித்தல் சோர்வைப் போக்கி, புத்துணர்ச்சியையும், உற்சாகத்தையும் தரவல்லது. ஆனால் நீங்கள் எதைப் புகைக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம்.




நீங்கள் புகைப்பது சுருட்டாகவே இருக்கட்டும். வின்ஸ்டன்சர்ச்சில்போன்ற பெரியார்கள்கூட புகைப்பதுசுருட்டே. ஆகவே நீங்களும் கனகலிங்கம் லைட் சுருட்டுகளையே புகையுங்கள்; கனகலிங்கம் சுருட்டுகளை புகைப்பதினால் பூர்ண திருப்தி பெறுவீர்கள்.

**கனகலிங்கம் லைட் சுருட்டுகள்**

தயாரிப்பாளர்கள்:

**வி. கனகலிங்கம்பிள்ளை & சன்,**

15, சென்ற் ஜோன் வீதி, கொழும்பு.





**சி. சி. சி.**

**தாவர உரப்பசளைக் கலவைகள்**

அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கிறது

எமது உரப்பசளைக் கலவைகளின் உதவியால் பெருந்தொகையான நல்ல விளைச்சலைப் பெறுவதற்கு நீங்கள் திடமாக நம்பியிருக்கலாம்.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவு செய்து எழுதுக:-

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பனி லிமிட்டெட்,

[பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது, அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.]

தபால் பெட்டி 33, கொழும்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யார் பேசுகிறது...பேரம் பலம் அண்ணை தானே. குரலே மாறிவிட்டது. தடிமன்போல் தெரிகிறது."

"உங்களிடம் வரவேண்டுமென்றால் எங்கே நேரம் கிடைக்கிறது. ஒரே வேலை. அலைச்சல். கண்டிக்கு ஒரு அலுவலாகப் போய்விட்டு இராத்திரித்தான் வந்தேன்.

"என்ன கிளிக்கு சுகமில்லையா? கவனமாய் இருக்க வேண்டும். எல்லா இடமும் காய்ச்சல் நடக்கிறது.

"நான் நேரம் கிடைத்தவுடன் வருவேன். இன்றைக்கு தவறினாலும் நாளைக்குக் கட்டாயம் வருவேன். உங்களுக்குத் தெரியாதா? நான் எத்தனை பேருடைய வேலை பார்க்கிறேன் என்பதை.

"என்ன செய்கிறது. எல்லோரும் அறிந்தவர்கள். தெரிந்தவர்கள் முடிந்ததைச் செய்யத்தானே வேண்டும். அண்ணை அதுகிடக்கட்டும். நான் அன்று சொன்னேனே அந்த அலுவல்......

"ஓமோம் சாந்தாதேவி தம்பையா அவர்கள் விஷயமேதான். எங்கே நீங்கள் மறந்து விட்டீர்களோ என்றுகூடச் சந்தேகப்பட்டேன். தகப்பனும் மகளும் பாவம். வீட்டுக்கு நடையாய் நடக்கிறார்கள். இப்பொழுதும் இங்கேதான் இருக்கிறார்கள்.

"மந்திரியைப் பார்த்தீர்களா. என்ன சொன்னார்?

"நீங்கள் சொன்னால் எனக்குத் தெரியாதா. எப்ப அண்ணை இனி வந்து காணும்படி சொன்னவர். இருபத்தைந்தாம் திகதியா?

"பாவம் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் சிறிது உரமாகச் சொல்லி இந்த விஷயத்தை மாதம் முடிய முன்னரே முடித்து விடுங்கள். எனக்கு மிகவும் வேண்டியவர்கள். கஷ்டப்பட்டுப் பிள்ளையைப் படிப்பித்துவிட்டு இப்பொழுது நடையாய் அலைகிறார்கள்.

"எந்தப் பள்ளிக்கூடம் என்றாலும் பரவாயில்லை. ஆனால் பெண் பிரசைகள் ஊரோடு இருந்தால் நல்லது.

"நான் இரவைக்கு அல்லது நாளைக்கு கட்டாயம் உங்களை வந்து பார்ப்பேன்.

"ஏதோ அவர்களால் இயன்றதைத் தருவார்கள் தானே. நான் வரும்போது கட்டாயம் கொண்டுவந்து தருவேன்.

"சரி அண்ணை. அப்ப வைக்கட்டுமா? மறந்துவிடாதீர்கள்."

ஒரு பெரிய விஷயத்தை போனிலேயே இலகுவில் செய்து முடித்ததாகக் காட்டிக் கொள்ளும் அலட்சியத்துடன் பாலசிங்கம் போனை வைத்துவிட்டு எதிரே நிமிர்ந்து பார்த்தார். மூன்று திரு நீற்றுக் குறி கொண்ட அவரின் நெற்றியிலே சுருக்கங்கள் விழுந்தன. உருண்டு பருத்த உரமான உடற்கட்டு, தொந்தி, வண்டி, தள்ள உருவம். அவரிடம் லாவகமான பேச்சுச் சாதுரியம் இயற்கையாக அமைந்திருந்தது. தம்பையாவையும் சாந்தாவையும் விருப்பு வெறுப்பு இல்லாதவர் போலப் பார்த்துக் கொண்டே ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தார்.

"தம்பையா அண்ணை, என்னால் ஒருவித தாமதமும் ஏற்படவில்லை. எத்தனை பேர் படித்து விட்டுவந்து அலைகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா. மந்திரியைப்பார்த்துஅலுவல் முடிக்கிறதென்றால் சாமானியமான விஷயமில்லை. கட்டாயம் மாதம் முடிவதற்கிடையில் நான் பேரம்பலத்தைக் கொண்டு அலுவலை முடித்து விடுவேன். இல்லாவிட்டால் வேறு ஆளை இருக்கிறது. எதற்கும் முதலில் நான் பேரம்பலத்தை இரவுக்குப் போய் பார்க்கப் போகிறேன். உங்களுக்கில்லாவிட்டாலும் இந்தப் பிள்ளை என் வீடு தேடி நடந்ததற்காகவாயினும் நான் இதைச் செய்துவிட வேண்டும்தானே. சாந்தா, நீ இனி மேல் நிம்மதியாய் நித்திரை கொள். ஒன்றிற்கும் பயப்படவேண்டாம்."

பாலசிங்கம் நாற்காலியை இரண்டு கால் குதிரையாக்கி ஆடியபடியே சொல்லிக் லிக் கொண்டிருந்தார்.

"ஏதோ மேனை. நீதான் இந்தக் காரியத்தைச் செய்து முடிக்கத் தக்கவன் என்று கேள்விப்பட்டுத் தான் வந்தேன். தாயில்லாத இந்த ஒரே பிள்ளை, படிக்க வேண்டுமென்று ஒரே. பிடியாய் நின்றாள். நான் உள்ளதெல்லாவற்றையும் வித்துச்சுட்டுத்தான் படிப்பித்தேன். இப்பொழுது ஒன்றும் மிச்சமில்லை. படிப்பித்த காசாவது இருந்திருந்தால் எங்காவது கரை சேர்ந்திருக்கலாம். இப்பொழுது அதுவுமில்லாமல் இதுவுமில்லாமல் இடையிலே இருந்து திண்டாடுகிறேன்."

தம்பையா கவலை தோய்ந்தவராக எழுந்து நின்று மடியை விரித்தார். பத்து ரூபா நோட்டுகளாக மடித்திருந்த இரு மடிப்புகளை எடுத்துக் கொண்டு பாலசிங்கத்தின் மேசையை நெருங்கினார்.

"இந்தா தம்பி. இதிலே இருநூறு ரூபாய் இருக்கிறது. இதுகூட பிள்ளையின் சங்கிலி ஒன்றை அடைவு வைத்துத்தான் கொண்டு வந்தேன்."

"இதெல்லாம் வேண்டாம் அண்ணை. பேரம்பலத்திற்கு நான் என் காசிலே கொடுக்கிறேன். பிறகு பார்த்துக் கொள்ளலாம். சாந்தா ஒரு காலம் நல்லாய் இருந்தாலே போதாதா? என் பிள்ளையைச் சேர்ப்பதற்குக்கூடப் பிறகு நான் சாந்தாவிடம் தான் சொல்லவேண்டும்."

"பரவாயில்லை. எடுத்துக் கொள்ளுங்கள்."

மேசைமேல் வைத்துவிட்டு தம்பையா திரும்பி வந்து நாற்காலியில் கொழுவியிருந்த குடையை எடுத்துக் கொண்டார். சாந்தாவும் எழுந்தாள்.

"அப்ப போய்விட்டு வருகிறோம். நீங்கள்......"

"நான் விஷயம் முடிந்ததும் சொல்லி அனுப்புகிறேன்."

தம்பையாவும் சாந்தாவும் கைகளைக் கூப்பிக் கும்பிட்டுவிட்டு வெளியே வந்தனர். மனதிலே ஒருவகை நிம்மதி.

பாலசிங்கம் மேசைமேல் தேடுவாரற்றுக் கிடந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்த்தார். மேசை லாச்சியை இழுத்து உள்ளே பணத்தைப் போட்டுப்பூட்டி விட்டு எழுந்தார். எதிரே ஓர் இளைஞன் தயங்கித் தயங்கி வருவதைக் கண்டு கூர்ந்து பார்த்தார்.

"அந்தப் பிச்சைக்காரத் தட்டுவாணி தருமலிங்கத்தின் மகன் கந்தசாமியா" என்று மனதிற்குள்ளே சொல்லிப் புகைந்து கொண்டார்.

"வாடா, தம்பி வா. என்ன தயக்கம்? ஏன் இந்தப் பக்கமே காணவில்லை? எனக்குத் தினமும் எத்தனை வேலைகள். தொல்லைகள் என்று உனக்குத் தெரியாதா? உன்னுடைய அலுவலை நான் மறக்கவில்லை. ஆனாலும் நீ அடிக்கடி வந்து ஞாபகப்படுத்தினால் தானே காரியம் ஆகும். நான் ஞாயிற்றுக்கிழமை கொழும்பிற்குப் போக இருக்கிறேன். நீயும் என்னோடு வந்துவிடு. அந்த லேபர் கொமிஷனரிட்டையே உன்னைக் கூட்டிக் கொண்டு போய் சொல்லி விடுகிறேன்......"

புதிய சேட் ஒன்றை எடுத்து மாட்டி அதன் பொத்தான்களைத் தள்ளிக் கொண்டே பாலசிங்கம் பேசிக்கொண்டிருந்தார்.

"ஞாயிற்றுக்கிழமை எந்த வண்டியிலே போகிறீர்கள்?"

கந்தசாமி தயங்கிக் கொண்டே விநயத்துடன் கேட்டான்.

"வசதியைப் பார்த்து ஏதாவது ஒரு வண்டியில் போகலாம். எதற்கும் நீ இன்னொரு தடவை சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக் கிழமை காலையிலே வந்து காணேன்."

* * *

நாலு வாரங்கள் கழிந்திருக்கும். தம்பையா, சாந்தா பின்தொடர, மீண்டும் பாலசிங்கத்தின் வீட்டுப் படிக்கட்டில் ஏறினார். முன்பிருந்த தயக்கம் இப்போது இருக்கவில்லை. அவரின் நெஞ்சு ஆத்திரத்தால் வெந்துகொண்டிருந்தது.

உள்ளே நுழைந்த இருவரையும் கண்ட பாலசிங்கம் சாவதானமாக எழுந்து வரவேற்றார். தம்பையாவின் முகத்தில் கவலைமட்டுமல்ல வேறும் ஏதோ ஒன்று மறைந்திருப்பதை பாலசிங்கம் கண்டு கொள்ளத் தவறவில்லை.

முன்னர் புன்னகையும் மயக்கும் சக்தியும் நிரம்பியிருந்த சாந்தாவின் முகத்திலும் வெறுப்பும் வேதனையும் விளையாடியதையும் பாலசிங்கம் கண்டு கொண்டார்.

"வா அண்ணை வாருங்கள். பல நாட்களாக இந்தப் பக்கமே காணவில்லை."

வழமைபோல சாவதானமாகக் கூறினார் பாலசிங்கம்.

"நீதானே வீட்டுக்கு செய்தி அனுப்புவதாகச் சொன்னாய். ஒரு மாதத்திற்கு மேலாகப் போய் விட்டது. இன்னும் ஒன்றையும் காணவில்லை. அப்பொழுதும் இரண்டு தடவை வந்தேன். வெளியூரில் வெளியூரில் என்று சொன்னார்கள்."

தம்பையாவின் பேச்சில் அலட்சியமும் காரமும் தொனித்தது:

"அப்படியா சொன்னேன். நான் விஷயத்தை மறந்து விடவில்லை. ஒவ்வொரு நாளும் வேலை. அலுவல், மந்திரி இங்கே வருகிறார் என்று அதோடு பத்து நாள் அலைந்தேன். நானும் அந்தப் பேரம்பலத்தின் வார்த்தையை நம்பிக்கொண்டிருந்தேன்."

(13-ம் பக்கம் பார்க்க)

விற்பனைக்கு


வீட்டுக் கட்டிடத்துக்குத் தேவையான சகல விதமான இரும்புச் சாமான்கள் எங்களிடம் மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கமும் சகோக்களும் லிமி.

33, 3-ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

450, பழைய சோனகத் தெரு, கொழும்பு.

138, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதகச் சட்டங்களுக்குப் பக்கபலமாயிருந்து பண்பை இழந்தவர்

## மூதூரில் போட்டியிடும் சுந்தரரின் முகமூடி கிழிகிறது

## தமிழரசுக் கட்சியின் திட்டங்களுக்குப் பாராட்டு

—அல்ஹாஜ் வி. ஸம். ஷம்சுதீன்—

தமிழ் பேசும் மக்களுக்கு பாதகம் விளைவிக்கக்கூடிய தான சட்டங்களை இயற்றிய திரு. டி. எஸ். சேனநாயக்காவின் மந்திரி சபையில் சேர்ந்திருந்து, அச்சட்டங்களுக்கு உறுதுணை அளித்தவரான திரு. சி. சுந்தரலிங்கம், தான் இழைத்த தவறுகளுக்காக அரசியல் துறவு பூண்டிருந்தார் சில காலம். மூதூர் இடைத் தேர்தலில் மீண்டும் அழையா விருந்தாளியாக நுழைந்திருக்கின்றார். அவருடைய கூற்று எந்த முறையில் சாத்தியமாகும் என்பதையும், தமிழரசுக் கட்சியின் திட்டங்கள் எந்த வகையில் நன்மை விளைவிக்கும் என்பதனையும் கட்டுரை ஆசிரியர் விளக்குகிறார்.

நீண்ட காலமாக அரசியல் வாழ்விலிருந்து ஓய்வு பெற்றிருந்த திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள் திடீரென, தமிழரசுக் கட்சிக்கு எதிராக மூதூர்தொகுதியில் போட்டியிட முன்வந்து, அவர் மௌன விரத நோன்பை முறித்துக் கொண்டார்.

எவருக்கும் தேர்தலில் போட்டியிட உரிமையுண்டு. இவர் வெற்றி பெறுவரா? என்பது வேறு விஷயம். அது எப்படியுமிருக்கட்டும். தமிழரசுக் கட்சியின் திட்டம் காரணமாகவே தமிழ் மொழி பேசும் இனங்கள் துன்புறுவதாக இவர் கூறும் வியாக்கியானம் புரியாத புதிராகவிருக்கின்றது. பிராஜா உரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி 10 இலட்சம் தமிழ் மக்கள் நாடற்றவர்களாகச் செய்தது, திரு. டி.எஸ். சேனநாயக்காவின் யூ. என். பி. தான்! இதன் பின், விஸாச் சட்டம் வந்தது. அன்று முதல்—இன்றுவரை தமிழ் மொழி பேசும் இனங்களின் உரிமைகளைப் பிடுங்கி, பன்னெடுங் காலமாக இந்நாட்டில் வதியும் மலை நாட்டுத் தமிழர்களின் பிழைப்பையும் பிடுங்கச் சட்டங்கள் வந்து கொண்டேயிருக்கின்றன.

1954க்குப் பிறகே தமிழ் மொழி பேசும் இனங்கள் அநீதிகள் அனைத்துக்கும் ஆளாயினர் என நினைக்கும் திரு. சுந்தரலிங்கம் அவர்கள் மந்திரி சேனநாயக்கா காலத்தில்—மந்திரி சபையில் அங்கம் வகித்தார். அக் காலத்தில் தான்—பிரஜா உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச் சட்டத்தில் கருத்து வேற்றுமைப்பட்டு, திரு. சுந்தரலிங்கம் அவர்கள் வாக்குக் கொடுக்க மறுத்ததுடன் நின்று விடாமல் மந்திரிப் பதவியையும் இராஜிநாமாச் செய்தார். இந் நிலையில் திரு. டி. எஸ். சேனநாயக்கா வழங்கிய சம அந்தஸ்தை—திரு. பண்டாரநாயக்கா நாசமாக்கினூர் என்பது பெரிய வியப்புத் தான்.

### பொறாமை

திரு. செல்வநாயகம் அவர்கள் இலங்கையில் தமிழ் மொழி பேசும் இனங்களின் மாபெருந் தலைவராக விளங்குவதும், தமிழரசுக்கட்சி இலங்கையில் வலுப்பெற்றுவிட்டதையும் கண்ட சில தலைவர்களுக்குப் பொறாமையாகயிருக்கின்றது. சத்தியாக்கிரகத்தைக் கேலி செய்கின்றனர். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை அசைத்து விட்டது, காந்திஜியின் தலைமையில் (அஹிம்சா தன்மையில்) நடைபெற்ற சத்தியாக்கிரகங்களே! தமிழரசுக் கட்சியாரால் நடத்தப்பட்ட எத்தச் சத்தியாக்கிரகங்களிலும் சண்டித்தனங்கள் காணப்படவில்லை. சுருங்கக் கூறின் இலங்கை அரசாங்கம், தமிழரசுக் கட்சிக்குப் பயந்து கொண்டிருப்பது போல், இலங்கையின் தமிழ் காங்கிரசுக்கு அல்லது வேறு எந்தக் கட்சிக்காவது பயந்து கொண்டிருப்பதாக நினைக்க இடமில்லை.

மலை நாட்டுத் தமிழ் மக்களின் ஜீவாதார உரிமையான வாக்குகளைப் பறித்து, அவர்களை அரசியல் அனாதைகளாகச் செய்தவர் திரு. டி. எஸ். சேனநாயக்காதானே! இந் நிலைமையில் அவர் சிறுபான்மை இனத்தவர்களுக்கு சம உரிமைகள் அளித்து விட்டாரெனக் கூறுவது குழந்தை மதியாகுமல்லவா?

### முஸ்லிம்களின் கதி......?

தமிழ் மொழி பேசும் இனங்கள், தனியாகப் பிரிந்துபோய், (பாக்கிஸ்தானைப்போல்) தனி ஈழ சுதந்திர நாட்டை நிறுவிக் கொள்ள வேண்டுமெனத் திரு. சுந்தரலிங்கம் அவர்கள் மக்களுக்கு ஆலோசனை கூறுகின்றார். நேர்மையான சமஷ்டி முறையை ஏற்றுக் கொள்ளத் தயங்கும் சிங்கள அரசாங்கம், சுதந்திரத் தமிழ்—ஈழ நாட்டைக் கொடுக்க முன் வருவார்களா? ஒருபோதும் இல்லை. இச்சிறிய இலங்கைத் தீவில் ஒரு தனி நாடு ஏற்படுமாயின், தமிழர்களுக்கு அடுத்த சிறுபான்மையினராக தீவு எங்கும் பரவியும்—விரவியும் கிடக்கும் முஸ்லிம்களின் கதி என்னவாகும்? அவர்களும் சமயத்தில் முஸ்லிம்களாகயிருந்த போதிலும் மொழியில் தமிழர்கள்தான்.

இலங்கையிலுள்ள தமிழ் தலைவர்களை முஸ்லிம்கள் ஒருபோதும் நம்பக் கூடாதெனக் கூறும் முஸ்லிம்களும் இலங்கையில் இல்லாமலில்லை. அதற்கு அவர்கள் சரியாகவோ, தப்பாகவோ பின்வரும் காரணங்களைக் கூறுகின்றனர். தமிழர்களில் ஒரு சாரார் தங்கள் சொத்தென நினைத்து, உத்தியோகங்களைக் கைப்பற்றினர். முஸ்லிம்களுக்கோ, அல்லது ஏழையான ஹிந்துக்களுக்கோ? கொடுக்கவில்லை. சிங்களவர்களை அடிமைப்படுத்த எண்ணி, 1915ல் சிங்களக் கலகத்துக்கு வித்திட்டனர். இதன் காரணமாக நிரபராதிகளான ஆயிரக்கனக்கான முஸ்லிம்கள் 1915ல் மாண்டனர்.

### சிறந்த திட்டங்கள்

அப்படித் தனி ரா[illegible] அமைப்பதாயின், சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் அடிக்கடி சண்டைகள் மூண்டு கொண்டிருக்கும். இதுபோக இலங்கையில் சிங்களவர்களும் தமிழர்களும் ஒருமித்து வாழ முடியாது. மேலும் பொருளாதாரம் தனித் தமிழ்நாட்டில் பாதகமடையும். ஏனெனில் மலைப் பிரதேசங்களும், அதன் முக்கிய விளை பொருட்களான தேயிலையும், ரப்பரும்—சிங்கள நாட்டைச் சேரும். பூகோள ரீதியாக மலைநாடு சிங்களவர்களுடையது எனக் கூறுவர். பாக்கிஸ்தானத்துக்கு இந்தியாவும்—இந்தியாவிற்குப் பாக்கிஸ்தானும் இன்று பயந்து கொண்டிருப்பதுபோல் இலங்கையும் வந்து முடியும். இலங்கையின் பொருளாதாரம், மொழிப் பிரச்சினை, ஐக்கியம் முதலியன ஏற்பட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திட்டங்களே மிகச் சிறந்தவைகள்- என்பதை எவராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

### ஜனுப் முகம்மதலி

இலங்கையில் தமிழ்மொழி பேசும் இனங்களின் பிரதிநிதிகளாக தமிழரசுக் கட்சி சார்பில் பலர் பார்லிமெண்டுக்கு வரவேண்டுமென்பது தான் தமிழரசாரின் குறிக்கோள். இதன் காரணமாகவே, மூதூர் தொகுதியில், வயதில் இளையவரும், ஏழைகளுக்கும், பாட்டாளி மக்களுக்கும்தொண்டு செய்தவரும், திருகோணமலையில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் வலிய வந்து தொண்டர்களைத் திரட்டி, எங்களுள் பேதமில்லை. சமயத்துறையில் முஸ்லிம்களாக இருப்பினும், மொழி அடிப்படையில் தமிழர்கள்தான் எனக் காட்டிக் கொண்டதியாகியான ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலி அவர்களை மூதூர் பிரதிநிதியாக நிறுத்தியிருக்கின்றனர். முஸ்லிம்கள் அதிகமாகக் கொண்ட கிராமங்களில் இவர் ஆதரிக்கப்படுவார், என்பதில் சந்தேகமில்லை! தமிழர்கள் பகுதிகளிலும் அப்படியே! அன்பர் ஜனுப் முகம்மதலி அவர்களுடன் நான் நெடுநாட்கள் பழகியிருக்கின்றேன். இவர் சமய பேதமற்றவர். மக்கள் எல்லோரும் ஓர் இனம் என எண்ணுகிறவர். எல்லோரும் இவரை ஆதரிப்பார்கள் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. எனவே வாக்காளர்கள் எல்லோரும், ஜனுப் முகம்மதலி அவர்களுக்கு வாக்குச் செய்து, தமிழரசுக் கட்சியின் குரலை இலங்கை எங்கிலும் உயர்த்துவார்களாக!

**சுதந்திரன் சந்தா விபரம்**


இலங்கை—இந்தியா உட்பட

**வருடச் சந்தா ரூபா. 10-00**

இன்றே உங்கள் சந்தாப் பணத்தை அனுப்பி சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்!

வாங்குங்கள்

மௌலானு சாரங்களை




"இவற்றிற்கு உத்தரவாதமுள்ளவை."
"மௌலானு" சாரங்கள் அரை நூற்றாண்டாக ஒப்பற்ற உன்னத ஸ்தானத்தை நிலைநிறுத்திக்கொண்டே வருகின்றன.

மௌலானு (சிலோன்) லிமிட்டெட்,
கொழும்பு அன்ட் கண்டி

MOULANA (CEYLON) LTD.
COLOMBO AND KANDY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பல்கலைக் கழகம்


இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் வருங்கால நிலையை எண்ணிப் பார்க்கும் போது இருளடர்ந்த மேகம் எதிர் நோக்கி வருவதை அவதானிக்க முடிகிறது. அரசாங்கக் காரியாலயங்களில் கடமை பார்த்துவரும் தமிழ் பேசும் மக்களின் தொகை, நாளாவட்டத்தில் குறைந்து குறைந்து அற்றுப் போய் விடும் என்பதில் ஐயமில்லை. ஆட்சி மொழியில் பாண்டித்தியம் பெற்ற போதிலும், தமிழ் பேசும் இனத்தைச் சேர்ந்த எவருக்கும் உத்தியோகம் கிடைக்கப் போவதில்லை என்பது கண்கூடு. வெறும் கண் துடைப்பு வேடிக்கை காட்டவே இப்போது சில நாடகங்கள் நடைபெறுகின்றன. ஆசை காட்டி தமிழ் பேசும் மக்களைச் சிங்களம் படிக்க வைக்க முயற்சிகள் நடை பெறுகின்றன.

வருங்கால சமுதாயத்தின் நலனை முன்னிட்டு, கலை, கலாச்சாரம், கைத்தொழில், கமத்தொழில் துறைகளில் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து, சுயமாகவே

**"குமுதம்"**
**போட்டி**
**அடுத்த வாரம்**
**வெளிவரும்**

தனது உறவினர்களைப் பார்த்துப்போக லீவுபெற்றோருடன் இங்கு வந்தார். வந்த இடத்திலேயே உதவி செய்ய முன்வந்தமை மெச்சத் தகுந்ததே!

இம்மாத ஆரம்பத்தில் கொழும்பு மகளிர் கல்லூரி அரங்கில் நடனமாடிய குமாரி அம்பிகையின் நடன நிகழ்ச்சி சபையோரின் ஏகோபித்த பாராட்டுகளைப் பெற்றது. பரதத்துக் கேற்ற உடைகள் அணியாதது ஒரு குறைதான். அதற்கும் காரணம் இருக்கும். இலங்கையில் நடன நிகழ்ச்சிகள் நடாத்துவதற்குச் சந்தர்ப்



ஆடிடலாம்... பாடிடலாம்... அழகான மேடை மீது......என்று நம்பியார் தேவிகாவை அழைக்கிறார் போலும் — "நாக நந்தினி" படத்தில்......

தொழிலாற்ற வசதிகளைப் பயிற்ற ஏற்படுத்தப் பட்டதுதான் தமிழ் பல்கலைக் கழகம்!

திருமலைப் பிரதேசத்தில் உப்பு வெளியில் 70 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு, கட்டிட அலுவல்கள் தொடங்க ஆயத்தங்கள் நடை பெற்று வருகின்றன. திருமலைப் பட்டின எல்லைக்குள் ஐந்தரை ஏக்கர் நிலமும் வாங்கப்பட்டுள்ளது. விவசாயக் கல்லூரியின் ஒரு பகுதிக்கான கட்டிடம் முடிவடையும் நிலையில் உள்ளது.

சிறந்த குறிக்கோளை இலட்சியமாகக் கொண்டுள்ள தமிழ் பல்கலைக் கழக இயக்கத்துக்கு அரசாங்கம் எந்தவித மான உதவியும் அளிக்கப் போவதில்லை என்பது யாவரும் அறிந்த விடயமே. தமிழ் பேசும் மக்களின் நல்லெண்ணத்தில் தான் கழகத்தின் எண்ணக் கோட்டைகள் நிஜக் கோட்டைகளாக உருவெடுக்க முடியும்.

### அம்பிகை ஆடினார்

கலையை புனிதமானதாகக் கருதி, அதற்காகவே வாழுவோரும் உண்டு. வாழ்வுக்காகவே கலை பயில்வோரும் உண்டு. முற்கூறப்பட்ட நிலையைச் சேர்ந்தவர் குமாரி அம்பிகை நடராஜா. தான் பயின்ற கலையை நாட்டுக்கும், இனத்துக்கும் அர்ப்பணிக்க முன் வந்த அம்பிகையைப் பாராட்டாத நெஞ்சம் தமிழ் நெஞ்சமாக இருக்க மாட்டாது. தமிழ் பல்கலைக் கழக நிதிக்காக இலங்கையில் இரண்டு நடன நிகழ்ச்சிகளை உதவிய குமாரி அம்பிகை இலங்கையிலுள்ள

பம் கிடைக்குமென எதிர் பார்த்திருக்க மாட்டார்கள்.

எண்ணியிருந்தாலும் அரசாங்கமும் தலையிட்டிருக்கும். ஆகவே அது நமது சர்ச்சைக்கு அப்பாற்பட்டதாகும்.

தமிழறிந்த சபையோரை மகிழ்விப்பதில் அபிநயம் பிரதான இடம் வகிக்கிறது. ஆனால் அன்றைய நிகழ்ச்சிகளில் அபிநயத்துடன், பல் வகைச ரசபாவங்களையும் வெளிப்படுத்தக் கூடிய பாடல்கள் இடம் பெறவில்லை. பாபநாசம் சிவன், அருணாசலக் கவிராயர் ஆகியோர்களின் இரு பாடல்களும் போதுமான அளவு அபிநயத்துக்குச் சோபை அளிக்கவில்லை. முகபாவங்கள் முன் வரிசைகளிலிருந்தோருக்கு நன்றாகத் தெரிந்திருக்கலாம், அம்பிகையின் முகம் சிறியதானதால் சற்றுத் தொலைவிலிருந்தவர்களுக்கு முகபாவம் தெளிவாகத் தோற்றியிருக்காது.

பின்னணி பாடி நட்டுவாங்கம்செய்த திருமதி எஸ். கமலாராணி, திருமதி எஸ். சங்கரி இருவரும் திறப்படத் தம் கடமையைச் செய்தனர். பக்கவாத்தியங்களும், அப்படியே.

மேடை அமைப்பும் ஒளி, ஒலி அமைப்புகளும் சிறப்புடன் பொருந்தியிருந்தன.

நல்லதொரு இலக்கைக் காட்டி, குமாரி அம்பிகையின் அரிய நடன நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த தமிழ் பல்கலைக் கழகத்தாருக்கு பாராட்டு வழங்காமல், இருக்க முடியாது.

—பாலு.

**சுதந்திரன் கலைப் பகுதி**

# ஆடல்பாடல்காட்சி

## சிவாஜியின் சுற்றுப் பிரயாணம் முடிந்தது

## தாயகம் திரும்புகிறார்

அமெரிக்க அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், அமெரிக்கா சென்றிருந்த சிவாஜி கணேசன், தனது சுற்றுப்பிரயாணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டார். தாயகம் திரும்பும் வழியில் தற்பொழுது ஜப்பான் வந்து சேர்ந்துள்ளார். ஜப்பான் நாட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு, ஹொங்கொங் சிங்கப்பூர் வழியாக மீண்டும் தமிழகம் வரவிருக்கிறார்.

ஒரு நாட்டின் கலைஞனுக்கு இன்னொரு நாடு தகுந்த மதிப்பளிப்பது ஒன்றும் புதியதல்ல. அவ்வப்போது தென்னகத்துக் கலைஞர்களை மேலைநாட்டு அரசாங்கங்கள் அழைத்து கௌரவப்படுத்தியதுண்டு. ஆனால் சிவாஜி கணேசனுக்கு அமெரிக்க அரசாங்கம் அளித்த வரவேற்புக்கு நிகராக, வேறு எந்த வரவேற்பையும் கூறிவிடமுடியாது. உலகத்தில் வேறு எந்தக் கலைஞனுக்கும் இலகுவில் கிடைக்காத வரவேற்பு சிவாஜி கணேசனுக்குக் கிடைத்திருக்கிறது. சிவாஜி கணேசன் உலகிலேயே ஒப்பாரும் மிக்காருமற்ற உயர் நடிகன் என்பது அமெரிக்க வரவேற்பிலிருந்தே புலனாகின்றது.

### சிறந்த நடிகர் சிவாஜி

இரண்டு மாதங்கள் அமெரிக்காவின் முக்கிய நகரங்கள் அனைத்தும் சிவாஜிக்கு அற்புதமான வரவேற்புக்கள் அளித்தன. "சிறந்த நடிகர் சிவாஜி" என்று ஹொலிவூட் நடிக நடிகைகள் அனைவருமே பாராட்டியுள்ளனர் சிவாஜியை.

அமெரிக்க அரசாங்கம் கொடுத்த வரவேற்பைவிட ஒருபடி மேலான வரவேற்பு ஒன்றை சிவாஜிக்குத் தங்கள் நாட்டில் அளிக்க ருஷ்யா தீர்மானித்திருக்கிறது. சிவாஜி தாயகம் திரும்பியதும் சூட்டோடு சூடாக ருஷ்ய அரசாங்கம் சிவாஜியுடன் தொடர்பு கொள்ள விருக்கிறது. ஆனால் தன் தாயாரின் அன்புக் கட்டளையையே தேவவாக்காகக் கருதும் சிவாஜி, தாயாரின் சொற்படிதான் நடப்பாராம். சற்று உடல் நலம் குன்றியிருக்கும் திருமதி ராஜாமணி அம்மையார் தன் அருகிலேயே தன் மகனைச் சிறிது காலம் வைத்திருந்துவிட்டுத்தான் மேலும் பிரயாணத்துக்கு அனுமதிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.


### சாந்தி

சிவாஜியின் அன்பு மகள் சாந்தி. அப்பா அப்பா என்று சதா ஏக்கத்துடனிருக்கின்றாளாம். தினசரி ஒவ்வொரு ஆப்பிள் பழம் தன் அப்பாவின் கையால் வாங்கிச் சாப்பிடும் சாந்தி, இதுவரை தான் தன் அப்பாவின் கையால் வாங்காத ஆப்பிள் பழங்களின் தொகையை எண்ணிக் கொண்டுள்ளாளாம். அப்பா வந்ததும் மொத்தமாக வாங்கிவிட அவளுக்கு எண்ணம் போலும்.

## எம். ஜி. ஆரின் "மீனவ நண்பன்"

எம். ஜி. ஆர். சொந்தமாக "தூங்காதே தம்பி தூங்காதே" என்ற படத்தைத் தயாரிக்கப் போவதாக சில வருடங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார். அத்துடன் கல்கியின் "பொன்னியின் செல்வனை"யும் திரைப்படமாக்க ஏற்பாடுகள் செய்து வந்தார். ஆனால் எதுவும் காரியசித்தியாகவில்லை. பிற படங்களில் நடிக்க ஒப்பந்தங்கள் செய்து வந்தமையினாலும், தி.மு.க. அலுவல்களில் ஈடுபட்டு வந்தமையினாலும் முயற்சிகள் தடைபட்டன.

இப்பொழுது "மீனவ நண்பன்" என்ற படத்தைத் துரிதமாகத் தயாரிக்க ஆயத்தங்கள் செய்து வருகிறார். இப்படத்தைத் தானே டைரக்ட் செய்து நடிக்கவிருக்கிறார். கதாநாயகியாகப் புதுமுகம் ஒன்றைப் போட உத்தேசித்துள்ளார். படம் அடுத்த சித்திரை மாதத்திற்குள் வெளிவந்துவிடுமாம்.



"சிலையென்று மாலையிட்டாய்.........சிங்காரச் சிலையே நீ இலையேல் என் வாழ்க்கை இனித்திடுமோ?..." என்று பத்மினியை இழுத்துக் கொண்டோடுகிறார் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.

படம்—ராணி சம்யுக்தா



"தமிழ் திரை வானில் மின்னும் எழில் தாரகைகளான பத்மினி, [illegible] ஆகியோரின் சாயலை என்னிடம் நீங்கள் காணலாமே! நான் அவர்களைப் போல் விரைவில் முன்னேறி விடுவேன் —என்கிறார் புஷ்பலதா.

## இலட்சியப் புரட்சி

"தங்கம் மனசு தங்கம்" படத்தைத் தயாரித்ததன் பின்னர் நீண்டகால ஓய்வெடுத்துவிட்டு மீண்டும் ஒரு படத்தைத் தயாரிக்கப் போவதாக பிரெண்டு ராமசாமி அறிவித்துள்ளார்.

இப்படத்தில் முதன் முதலாக புரட்சி நடிகர் எம். ஜி. ஆரும், இலட்சிய நடிகை விஜயகுமாரியும் சோடி சேருகின்றனர். இலட்சியமும் புரட்சியும் சேர்ந்தால், அது ஒரு "இலட்சியப் புரட்சி"யாக அமைந்துவிடுமே...ஆகவே "இலட்சியப் புரட்சி" என்றே பெயர் வைத்துவிடலாம், என்று சினிமா உலகப் பிரமுகர்கள் பிரண்டைக் கிண்டல் செய்துள்ளார்களாம். எம். ஜி. இராமச்சந்திரன் - விஜயகுமார் சோடியுடன் அசோகன், எம். ஆர். ராதா, தங்கவேலு ஆகியோரும் தோன்றுகின்றனர்.

காசிலிங்கம் இதை டைரக்ட் செய்யவிருக்கிறார். எம். எஸ். சுப்பையா இசை அமைக்கிறார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சாதுரியவான்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

"மூன்று நாட்களுக்கு முன் பேரம்பலத்தைக் கண்டேன். நீ டெலிபோன் செய்தது பற்றியும், இருநூறு ரூபா பணம் கொடுத்தது பற்றியும் சொன்னேன். எதுவுமே தெரியாது என்று அந்த மனுஷன் சொன்னார். வேறு ஆருக்காவது நீ சும்மா டெலிபோன் செய்திருக்கலாம் என்றுகூட அவர் சொன்னார். நான் இந்தப் பிள்ளையையும் இழுத்துக் கொண்டு அலைந்து ஏமாந்ததுதான் மிச்சம் அந்தப் பணத்தையாவது தந்துவிடு நான் போய்விடுகிறேன்."

தம்பையாவின் குரல் ஆத்திரத்தில் தடுமாறியது. பாலசிங்கம் ஒரு கணம் மிரள மிரள முழித்தார். சில நேரத்தில் தன்னைச் சமாளித்துக் கொண்டார்.

"அவன் ஒரு அயோக்கியன். நான் கூட ஏமாந்து விட்டேன். சுபமா திர்ந்த வங்களையெல்லாம் பிடித்து மேலே அனுப்பி விட்டால் இப்படித்தான். உங்களோடு அவன் அப்பிடித்தானே பேசுவான். நீங்கள் லஞ்சம் கொடுத்தது பற்றி நேரே சொன்னால் எவன்தான் ஒப்புக்கொள்வான். அவன் அப்படித்தானே பேச வேண்டும். அவன் என்னைத்தான் ஏமாற்றி விட்டான். நீங்கள் தந்த பணத்தை அன்று இரவே அவனிடம் கொண்டு போய் கொடுத்துச் சொல்லி விட்டுவந்தேன். அவன் மந்திரியை இன்று காணுகிறேன், நாளைக்கு என்று ஏமாற்றிக் கொண்டே வந்தான். நானும் பல நெருக்கடிக்குள்ளே வேறு விதமாக முயற்சி செய்ய முடியாது போய் விட்டது. பேரம்பலம் தொலைந்து போகட்டும். அந்த நிரந்தரக் காரியதரிசியே எனக்கு நன்கு தெரிந்தவன். நான் நேரில் போய் இது என் மருமகள் பிள்ளை. நீங்கள் இதைக் கட்டாயம் எனக்காகச் செய்து தரவேண்டுமென்றால் அவன் மறுக்க முடியாது. இத்தனை நாளும் நான் எதற்கு ஒரு தெரிந்தவனைப் பிடித்து என் முகத்துக்காக ஒரு அலுவலைச் செய்துதரும்படி வேண்டி ஏன் வீணுகக்கடமைப்பட வேண்டும் என்றுதான் இருந்தேன். நாங்கள் கஷ்டப்பட்டு அனுப்பினவர்கள் ஏன் இந்த உதவிகளைச் செய்யப்படாது என்றே பேரம்பலத்தின் வாலைப் பிடித்தேன். தம்பையா அண்ணை, நீங்கள் சிறிதும் பயப்பட வேண்டாம் நான் நிரந்தரகாரியதரிசியிடம் நேரடியகவே சொல்லி விடுகிறேன். இப்பொழுது நீங்கள் இருக்கும்போதே கையோடு, ஒருதடவை பார்க்கலாம்"

பாலசிங்கம் டெலிபோன் டைரக்டரியை எடுத்து தட்டினார். விரலை இழுத்துக் கொண்டே சென்று ஒரு எண் எதிரே நிறுத்தினார். உடனே டெலிபோனை எடுத்து ஒரு எண்ணை இழுத்து விட்டார்,

"புரங்கா. ஆறு, நாலு இரண்டு பேசுகிறேன். கொழும்பு ஏழு, ஒன்பது, ஐந்து, எட்டு, நாலு... சரி. அதுதான். எவ்வளவு நேரம் தாமதமாகும்... நாலுமணித்தியாலம்!"

பாலசிங்கம் போனை கோபத்தோடு வைத்தார்.

"மண்ணுங்கட்டி டெலிபோன். இது இருக்கிறதென்று ஆபத்துக்கு உதவுகிறதா. நீங்கள் இருக்கும்போதே நான் நிரந்தர காரியதரிசிக்கு உங்கள் விண்ணப்பத்தை ஞாபகப் படுத்தி விட்டு நேரிலே பார்த்து விஷயத்தை முடிக்கலாம் என்று நினைத்தேன். ஆனாலும் பரவாயில்லை. கந்தோரிலிருந்து அவர்போவதற்கிடையில் நான் டெலிபோனில் சொல்லிவிடுவேன் நாளை இதற்காக வாயினும் ஒருதடவை கொழும்பிற்குப் போய் விட்டு வருகிறேன். அண்ணை நீங்கள் கொஞ்சமும் பயப்பட வேண்டாம். ஒரு மாதத்திற்கிடையில் பள்ளிக்கூடம் கிடைக்கிறதா இல்லையா என்று பாருங்கள். உங்களையும் நான் வீணுகப் பலதடவை அலைத்துவிட்டேன். இந்தப் பிள்ளை என் வீட்டுப் படிக்கட்டு ஏறியதற்காக வாயினும் நான் இந்த உதவியைச் செய்ய மாட்டேனு. பேரம்பலம்—அந்தக் கள்ளனை நம்பி நாளெல்லாம் வீணுய்ப் போய்விட்டது. அண்ணை நீங்கள் என்னை நம்புகிறீர்கள் தானே. அந்தக் கோப்பியை எடுத்துக் குடியுங்கள் ஆறப் போகிறது.

"உன்னை நம்பாமல் நாங்கள் யாரை நம்புகிறது. பேரம்பலம் இப்படிப்பட்ட ஆள் என்று எனக்குத் தெரியாமல் போய் விட்டது"

தம்பையாவின் குரலில் சாந்தமும் பணிவும் ஒலித்தது. சாந்தாவின் முகபாவத்தில் ஏற்பட்ட மாறுதலையும் பாலசிங்கம் அவதானிக்கத் தவறவில்லை. இருவரும் கோப்பி அருந்தியதும் எழுந்தனர்.

"சரி வருகிறோம் தம்பி, இனிமேல் எப்பொழுது வர வேணும்?"

"நீங்கள் வரவேண்டாம். நானே உங்கள் வீடுதேடி வருவேன். சாந்தா கூட இத்தனைதடவை என் வீட்டிற்கு வந்ததற்காக வாயினும் நான் ஒரு தடவை வரப்படாதா?"

இருவரும் கைகூப்பி விட்டுப் புறப்பட்டனர். மனதிலே நிறைவு; இதற்கு மேலும் ஒரு மனிதன் ஏமாற்ற மாட்டான் என்ற துணிவு!

தன் நாடகத்தின் வெற்றியை மனதில் நினைந்து, அதைத் தாங்காத இதயத்தின் வெற்றிப் பூரிப்பு மெல்லிய சிரிப்பாக உதிர, பாலசிங்கம் உள்ளே நுழைந்து டெலிபோனைக் கையில் எடுத்தார்.

## சர்வாதிகாரர்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

............ஐயோ நினைக்கவே நெஞ்சம் பதறுகிறது.

முகம்மது அலி தமிழரசில் சேர்ந்தது மத விரோதமானது என்பது போல் அறிந்தோரும் அறியாதோரும் பேசிக் கொள்கின்றனர் அப்படியாயின் 'மஜீது சேர்ந்துள்ள கட்சி சிங்களக் கட்சியாயிற்றே' அது நியாயமாணதோ? 'ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி'—என்றுஞர் ஒருவன் இப்படிப் பேச்சுப் பேசுவது நல்லதா என்று எண்ணிப் பாருங்கள்.

வாழு, வாழ விடு என்று கூறிய ஒரு அறிஞரின் கூற்றைப் பல இடங்களிலும் எங்கள் பிரதிநிதி மஜீது அவர்களே பேசியிருக்கிறார்கள். ஆகவே, தான் மட்டும் வாழ எண்ணுது பிறரையும் வாழ விடுமாறு பொதுமக்கள் கேட்க வேண்டியேற்படுகிறது இந்தத் தொகுதியைப் பொறுத்த வரையில் மஜீதும் வேண்டும் அலியும் வேண்டும் அலி அதிகம் பேசாவிட்டாலும் தனது காலத்தில் பல வேலைகளையாவது செய்திருக்கிறார் என்பது இத்தொகுதி மக்களுக்குத் தெரியும். அவரது நல்ல பண்புகளையும் மக்கள் விரும்புகிறார்கள். ஆகவே, நமக்குள்ளே ஏன் பிணக்குகள் உண்டாக வேண்டும்?

## மூதூர் மூத்தவனுக்கு அஞ்சலி





மூதூர் முன்னாள் எம். பி. திரு. ஏகாம்பரம் அவர்களின் ஞாபகார்த்தமாக, திருமலை வடகரை வீதிக்கு "ஏகாம்பரம் வீதி" என்று நகரசபை பெயரிட்டுள்ளது.

## திருமலைச் செய்திகள்

- சிவயோக சமாஜ ஆச்சிரமக் கிளையொன்று அண்மையில் ஆண்டான் குளமருகில் திறக்கப்பட்டுள்ளது.
- திருமலை முத்தமிழ் கழகத்தினர் பண்டித, சங்கீத வகுப்புக்களை ஆரம்பித்து நடத்துகின்றனர். பண்டித வகுப்புக்களுக்கு பண்டிதர். ஐ. சரவணமுத்துவும் சங்கீத வகுப்புக்களுக்கு திரு. தில்லையம்பலம் அவர்களும் பொறுப்பாளர்களாக இருக்கின்றனர்.
- "தேசியப் பதிவு இடாப்பு மசோதா தமிழ் பேசும் மக்களை அழித்து ஒதுக்கு வதற்காகக் கொண்டுவரப்பட்ட மசோதா. இம் மசோதாவை உடனடியாக அரசினர் வாபஸ் வாங்க வேண்டும்" இவ்வாறு கூறும் பிரேரணையொன்று 7-ம் வட்டார உறுப்பினர் திரு. இ. சோமசுந்தரம் அவர்களால் கொண்டு வரப்பட்டு திருக்கோணமலை - நகராண்மைக் கழகக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

Dial 2739




ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல் ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி

கொழும்பு-14.

டெலிபோன் : 2739

## கல்வியே கருந்தனம்

வர்ண ஜால நிறங்களில் வனிதையரை ஜொலிக்க வைப்பது!!!

எலைட் சுப்பர்லோன் ஜோர்ஜெட்!!



எழில் மிகு பல ஹை-பை நிறங்கள்;
எல்லோரும் விரும்பும் நவீனடிசைன்கள்;
சிறந்த தயாரிப்பு இவை அனைத்தும்

எலைட் சுப்பர்லோன் ஜோர்ஜெட்டை

ஏனைய ஜோர்ஜெட்டுகளிற் கெல்லாம் என்றும் முன்னிற்க வைக்கின்றன.

★ ★ ★

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணிவரை இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ் லிமிட்டெட், கொழும்பு.

சில்லறை வியாபாரப் பகுதி: 110 & 114, மெயின் வீதி.

மொத்த வியாபாரப் பகுதி: 26, கெய்ஸர் வீதி.

—Mylads/KL. 291/62—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அன்புத் தம்பிக்கு...!

('கொடித்தீவான், அக்கரைப்பற்று.)

தம்பி,

வள்ளுவன் வாய்மொழி யொன்றை 'நட்பு' என்ற அதிகாரத்திலிருந்து பிரித்தெடுத்து எழுதுவதோடு அதற் கிலக்கணமாய் இலங்கிய இருவரை இலக்கியத்தில் இருந்து எடுத்துக் காட்டுகிறேன்; அதைக் கேட்டு நடப்பாய் என்றே நம்புகிறேன்.

கல்லூரி மாணவன் நீ! பலரோடு பாசமாகவும்—நேசமாகவும் நெருக்கமாகவும்—உருக்கமாகவும் பழகுவாய், பேசுவாய், அத்தோடு நின்றுவிட்டால் ஆனந்தந்தான்; ஆனால் சில வேளைகளில் ஒட்டி உறவாடிய நீங்கள் வெட்டிப்பேசவும், எட்டி உதைக்கவும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. இந்த இடத்தில்தான் இதயம் பதைபதைக்கிறது. உண்மை நண்பர்கள் இப்படி யெல்லாம் இருக்கலாமா? அறிவு, குணம் ஆகிய வைகளில் ஒப்பும்—உயர்வும் பெற்றிருப்பின் இவைகள் ஏற்படுமா? உடுக்கை இழந்தவன் கை போல இடுக்கண்களை வதல்லவா உயிர்நட்பும், உண்மைநட்பும்.

''புணர்ச்சி பழகுதல் வேண்டா
உணர்ச்சிதான்
நட்பாங்கிழமை தரும்''

என்பதிலிருந்து நீ என்ன அறிகிறாய்? உண்மை நட்புக்கு ஒருவரோடொருவர் ஒன்றியிருக்க வேண்டிய தில்லை. உணர்ச்சிகள் மட்டும் ஒத்திருந்தால் போதும் என்பதை நீ உணரவில்லையா? எனவே அண்டிப்பழகுவதாலும், அலைந்து விளையாடுவதாலும் அன்பு பெருகாது, நட்பு வளராது என்பதை நன்கறிந்து கொள்.

புணர்ச்சியின்றி உணர்ச்சியாலேயே ஒத்த கருத்துடையவர்களாகிய, உயிருக்குயிர் கொடுத்த உத்தமர்கள் இருவரைப்பற்றித்தான் இங்கே எழுதப் போகிறேன் படித்துப்பார்! அப்படியே நடந்திடவும் பார்!!

சோற்று வளங்குன்றாச் சோணாட்டைச் சேர்ந்தது உறையூர். அந்த உறையூரை ஒருசமயம் ஆண்டு வந்தான் கோப்பெருஞ் சோழன். அவன் நிறைந்த தமிழறிவும் கவிபாடும் ஆற்றலுங் கொண்டவன். இல்லை யென்னும் சொல் அவன் வாயிலும் இல்லை, மனதிலும் இல்லை. அதனால் பல புலவர்களும் அவனை வள்ளல் என்றே வாயார வாழ்த்தினர். கவிகள் பாடினர்.

அப்போது, ஆற்று வளங் குறையாப்பாண்டிய நாட்டிலே பிசிராந்தையார் என்ற பெயர் பூண்ட புலவர் ஒருவர் வாழ்ந்துவந்தார். பிசிர் என்பது ஊரின் பெயர்; ஆந்தையார் என்பது புலவர் பெயர். பிசிராந்தையார் நற்குணங்கள் கொண்டவர். கற்றபடியே ஒழுகும் பெற்றியர். அவருக்கு வாய்த்த மனைவி மக்களும், உற்றார் சுற்றத்தவர்களும் அவரைப் போலவே; ஊர மக்களும் அப்படியே, அவரிடம் கணக்கற்ற காணி பூமியும், பொருள்—பூணாரங்களும் இருந்தமையால் கவலையின்றி வாழ்ந்து வந்தார். முதுமையிலும் இளமைக் கோலங் கொண்டே இலங்கினார்.

பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனது குண விசேடங்களை வேறுபுலவர்களின் மூலம் கேள்விப் பட்டார். சோழனும் பிசிராந்தையாரின் புலமையைப் பற்றி மற்றையோர் புகழக் கேட்டான். இருவரது உள்ளங்களும் ஒன்றின. ஒருவரை ஒருவர் நெஞ்சார நேசித்தனர். உணர்ச்சியால் இருவரும் ஒன்றுபட்டனர்.

ஆனால் இருவரும் சந்திப்பதற்குச் சமய சந்தர்ப்பங்கள் சதி செய்தன. ஓலைகளின் மூலமாக உறவை வளர்த்தார்கள். இப்படியாகவே பல ஆண்டுகள் அகன்றன.

ஒருமுறை மக்களோடு சண்டையிட்டுக் கொண்டு, சோழன் அரசைத் துறந்துவிட்டான். அவன் மனம் கவலையால் வாடியது. உணவும் உறக்கமும் இன்றி வடக்கு நோக்கித் தவமிருந்து உயிர்விட உறுதிகொண்டான். அதற்காக ஊர்கோடியிலே தனக்கொன்றும், இன்னுமொன்றுமாக இரு மேடைகளை உருவாக்கும்படி கட்டளை இட்டான். 'பக்கத்தில் இன்னுமொரு மேடை ஏன்?' என்று அமைச்சர் வினவியபோது ''என் உயிரனைய நண்பர் ஆந்தையார் இன்னும் சில தினங்களில்' இங்கு வருவார்; அவரும் என்னோடு வடகிருப்பார் அதற்காகத்தான் இன்னொரு மேடை என்றார். பின் தமக்குரிய மேடையில் வடக்குத் திசை நோக்கி அமர்ந்துவிட்டான். 'வடக்கிருத்தல்' என்பது ஊணுறக்க மின்றி வடக்கு நோக்கித் தவமிருத்தல் எனப் பொருள் தரும். பழைய கால இலக்கியங்களில் இப்பதம் உபயோகப் படுத்தப்பட்டுள்ளது.

சோழன் இங்கே வடக்கிருக்க; ஆந்தையாருக்கு அவனைப்பற்றி என்று மேயில்லாத எண்ணங்கள் ஏற்பட்டன. அவனுக்கு ஏதோ ஆபத்து என்பது அவருக்குப் புரிந்து விட்டது. உடனே அவனைக்காணப் புறப்பட்டார். புறப்பட்டவர் சில தினங்களில் சோழன் வடக்கமர்ந்த மேடைக்கு வந்து சேர்ந்தார். அவரைக்கண்டு அங்கிருந்தவர்கள் ஆச்சரியப் பட்டனர். சோழனுக்ும்—புலவருக்கும் இடையே ஏற்பட்ட ஒத்துணர்வு நட்பை நயம்படப் பாராட்டினர்.

ஓடிவந்த புலவர், அரசனின் உருவை உற்று நோக்கிக் கண்ணீர் வடித்தார். அழுதழுதுகண்ணீர் வடித்த பின்பு சோழனருகே அமைக்கப்பட்டிருந்த மேடையில் தாமும் வடக்கிருந்து ஆவி நீத்தார். இதுபண்டைக்கால இலக்கியம் படம் பிடித்துக் காட்டும், பைந்தமிழ் மக்களின் பண்பாட்டு ஒளியும் [illegible] அதை முடிந்த வரை கடைத்த [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறகடித்துப் பறக்க நினைக்கிருளோ இச்சிறுமி? இவள்தான் பேபி விமலா. 'குழந்தைகள் கண்ட குடியரசு' என்ற படத்தில் அழகாக நடனமாடியிருக்கிருள்.

படித்து விட்டு உன் பண்புள்ள நண்பர்களுக்கும் காட்டு.

வணக்கம்.

உனது அன்புமிக்க,

அண்ணு.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை ''வளர்மதி''யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து 'வளர்மதி'' C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 5.

பெயர் ______________________

பாடசாலை ______________________

விலாசம் ______________________

______________________

______________________ ______________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

# நல்ல பொம்மை

(சாரணு ஜையும்)

சின்னஞ் சிறு பொம்மை
சிவந்த நல்ல பொம்மை
என்ன சொல்லி உன்னை
ஏய்க்க வேண்டும் சொல்லு.

ஓடி ஆட மாட்டாய்
ஓல மிட மாட்டாய்
கூடி வாழ மாட்டாய்
குழந்தை யான பொம்மை.

வளர வில்லை நீதான்
வயது முனக் கில்லை
தளர்வு கொள்ள மாட்டாய்
தவறு செய்ய மாட்டாய்.

கள்ளம் கபட மில்லை
கண்ணில் களங்க மில்லை
உள்ளம் உந்தன் வெள்ளை
உலகம் உந்தன் அடிமை.

சொல்லப் போனல் நீதான்
செல்ல மான பொம்மை
சொல்ல உந்தன் பெருமை
சொல்லி முடிவ தில்லை.

# அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

(ஆ. சுப்பையா, உக்குவளை.)

நமது அருமைத் தாய் நம்மைப்பத்து மாதம் சுமந்து பெற்ருள். இரவு, பகல் எல்லாம் பாலூட்டி, சோறூட்டி நம்மை வளர்த்தாள். நாம் அழும்போது அவள் சாப்பிட்டுக் கொண்டிருந்த உணவையும் கூட வைத்துவிட்டு ஓடி வந்து தூக்கி தொட்டிலிலும், தோள்மேலும் வைத்துத் தாலாட்டுவாள். நமது தாய் நமக்கு நோய் வந்த போதும் நம் பக்கத்தில் இருந்து எங்களின் நிலையை எண்ணி, எண்ணிக் கண்ணீர் சிந்திஞள். அவள் நமக்காக மருந்துண்டு பத்தியம் காத்தாள். அவள் தான் தூங்காமல் எங்களைத் தாலாட்டித் தூங்க வைத்தாள்.

நமது தந்தை இரவு பகலாக உழைத்து பணமும் பொருளும் தேடுகிருர். நமக்கு ஐந்து வயதானதும் நம்மைப் பாடசாலைக்கு கல்வி கற்பதற்கு அனுப்பி வைத்தார். நமது பெற்ருேர் நமக்குத் தேவையான பொருட்களையும், புத்தகங்களையும், விளையாட்டுச் சாமான்களையும் வாங்கித் தருகின்றனர். அது மட்டுமா? நமது அருமைப் பெற்ருேர் நாம் பாடசாலைக்குப் போகும்போதெல்லாம் நமது கையில் பணமும் தந்து அனுப்புகின்றனர். அவர்கள் நாம் வருங்காலத்தில் நல்ல பிள்ளைகளாக வரவேண்டும் என்று எங்களுக்கு அடிக்கடி புத்தி சொல்லுகின்ருர்கள். நாம் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதுதான் நமது பெற்ருேரின் அவா. நாம் நடக்க முடியாத காலத்தில் நம்மைத் தூக்கிச் சுமந்தனர். நாம் பேசத் தெரியாத காலத்தில் நம் மழலைச் சொற்களைக் கேட்டு மகிழ்ந்தனர். அவர்கள் நம்மைத் தேடக்கிடையாத செல்வமாக மதித்து நமக்கு நல்ல உணவும், உடையும் தந்து வளர்த்தனர். அவர்கள் பிள்ளைகளின் உயிரைத் தமது உயிராக எண்ணுபவர்கள். அவர்கள் என்றும் நம்முடைய நன்மையை விரும்பி அதற்காகப் பாடுபடுபவர்கள். அப்படிப்பட்ட பெற்ருேருக்கு நாம் என்ன பதில் உபகாரம் தான் செய்ய முடியும்? என்ன உபகாரம் தான் செய்தாலும் அதற்கு ஈடாகாது.

''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்ருர் ஔவைப் பிராட்டியார். ஏனென்ருல் கடவுள் ஒருவர் உண்டென்று அறிவதற்கு முன் நாம் கண்கண்ட தெய்வம் நமது பெற்ருேரே! ஆதலால் நாம் அவர்களை ஒருபோதும் மறவாது, அவர்களை வழிபடும் தெய்வங்களாகக் கருதி நாம் வழிபடுதல் வேண்டும். நமது பெற்ருேரை வழிபடுதல் கடவுளை வணங்குவதற்குச் சமமாகும். அவர்களிடத்தில் நாம் மிகவும் அன்பும், மரியாதையும் உள்ளவர்களாக நடந்து கொள்ளவேண்டும். அவர்களின் சொற்கேட்டு அதன்படி ஒழுக வேண்டும். நமது பெற்ருேருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கீழ்ப்படிந்து நடப்போமாக!

# வளர்மதி புதிய மருமக்கள்

3394 எம். கோவிந்தசாமி, அக்கரப்பத்தனை.

3395 செ. ஞானராஜா, வல்வெட்டித்துறை.

3396 எஸ். அந்தோனிசாமி, அட்டன்

3397 வி. திருப்பதி.

3398 இ. நடராஜசர்மா,

3399 ஏ. எம். ஹுசைன், கல்முனைக்குடி.

3400 சு. மனோகரன், இறத்தோட்டை.

3401 எம். தங்கமணி, எட்டியாந்தோட்டை.

3402 ரஞ்ஜினி பஸ்ரியன், உக்குவல.

3403 கோ. பஞ்சாட்சரம், மட்டக்களப்பு.

3404 ஜெயராணி சபாபதிப்பிள்ளை, மல்லாகம்.

3405 மாரி இரத்தினசாமி, லுணுகலை.

3406 எஸ். அந்தோனிசாமி, நோர்வூட்,

3407 ச. ரேச், இறக்குவானை.

# கழகச் செய்திகள்

## நாடெங்கும் வள்ளுவர் விழா

### தமிழ் இலக்கிய சங்கம்

தமிழ்மொழி ஈழநாட்டிலும் பேசப்படுகின்றது. தமிழ் நாட்டிலும் பேசப்படுகின்றது. இரு நாடுகளின் தமிழையும் பொதுநிலையில் வைத்துச் சீர்தூக்கிப் பார்க்கையில் உங்கள் நாட்டிலே நல்ல தமிழ் இருப்பதைக் காண்கின்றேன். இங்கு மக்கள் வாயினின்று சரளமாக வந்தவண்ணமிருக்கும் தூய தமிழை அனுபவிக்கின்றேன். எங்கள் நாட்டிலே பிறந்த திருவள்ளுவர் உங்கள் நாட்டிலே போற்றப்படுகின்றார். அங்கு வள்ளுவர் விழா அரிதாகவே நடைபெறுகின்றது "இவ்வாறு கொழும்பு, கொட்டாஞ்சேனை, புனித பெனடிக்ற் கல்லூரித் தமிழ் இலக்கிய சங்கக் கூட்டம் மேற்படி கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. திருச்செல்வம் தலைமையில் நடைபெற்றபோது திருச்சிராப்பள்ளி, புனித வளனார் கல்லூரித் தமிழ் பேராசிரியர் திரு. ஐயன்பெருமாள் கோனார் சொற்பொழிவாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:—

'அழகான எழுத்து நடை ஈழநாட்டு மாணவர்களிடமுண்டு; நல்ல எழுத்து வடிவமுண்டு; கொடுத்த கருத்திலே நின்று எழுதுகையில் நல்ல தமிழ்நடை அவர்களிடமிருந்து பிறக்கின்றது. நற்றமிழ் நடையெழுத வேண்டுமாயின் தமிழ் இலக்கியங்களிலே - திருக்குறளிலே, கம்பராமாயணத்திலே— வரும் சொற்களையும், சொற்றொடர்களையும், அமைப்புகளையும் இணைத்து எழுத வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

திரு. ஐயன்பெருமாள் கோனார் அவர்களின் மாணாக்கரும், மேற்படித் தமிழ்ச் சங்க முன்னைநாள் தலைவருமாகிய திரு. மில்ரோய் தம்பிநாயகம், பேராசிரியர் அவர்கள் தமிழுக்கும் ஈழநாட்டுத் தமிழ் மாணாக்கருக்கும் ஆற்றி வரும் தொண்டைப் பாராட்டிச் சங்க சார்பில் அவருக்கு நன்றி நவின்றார்.

—

### தேனமுதம் இலக்கிய மன்றம்

ஒலிபெருக்கிக் குழாய்களுக்கு முன்நின்று வாயாலே வாழ்த்தி வள்ளுவருக்கு விழா எடுப்பதிலே ஒரு பயனுமில்லை, வள்ளுவன் கூறிய அரிய வாழ்க்கை நெறிகளைக் கடைப்பிடித்து தமிழர் சமுதாயம் ஒரு தன்னிகரில்லாத நாகரீகத்தைக் கொண்ட சமுதாயம் என்ற உண்மையை உலகுக்குக் காட்டவேண்டும். அப்பொழுதுதான் நாம் வள்ளுவனின் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்தவர்களாவோம். மட்டக்களப்பு கொபேசியல் கல்லூரியிலே நடைபெற்ற தேனமுத இலக்கிய மன்றத்தினர் நடத்திய திருவள்ளுவர் விழாவிலே, உரையாற்றும்போது திரு. திமிலை மகாலிங்கம் அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. 'நடமாடி'' அவர்கள் பேசுகையில் வள்ளுவனுக்கு விழா எடுப்பதற்கு ஒரு குறிப்பிட்ட காலவரையறை அவசியம் இல்லை, நாளொன்றுக்கு ஒரு குறள் வீதம் கற்று வள்ளுவனின் அரிய கருததுக்களை மனதில் நினைத்தாலே அது வள்ளுவருக்கு எடுக்கும் விழாவாக அமைந்துவிடுமென்று குறிப்பிட்டார்

என். எஸ். அருள்ராசா (தேனுடன்) அவர்கள் திருக்குறளின் விசேஷ தன்மைகள் பற்றி அரிய இலக்கிய ஆராய்ச்சிக் கருத்துக்களை வெளியிட்டார்.

இதையடுத்து நகைச்சுவை எழுத்தாளர் மாஸ்டர் சிவலிங்கம் வள்ளுவரின் உலக விஜயம் என்னும் தலைப்பில் ஹாஸ்யமாகப் பேசி மகிழ்வித்தார். பின்பு திரு. பொ. தங்கவேலு பேசினார்.

ஆசிரியர் திரு. நாகரெத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் செல்வர்கள் சக்திதாசன், இராஜேந்திரன் ஆகியோரும் செல்விகள் சாரதா அழகையா, சகுந்தலா அழகுதுரை ஆகியோரும் இன்னிசை வழங்கினர். செயலாளர் திரு. சக்திதாசன் நன்றியுரை கூறினார்.

—

### இரத்தினபுரி தமிழ் மன்றம்

"வள்ளுவர் பெருந்தகையின் விழாக்களிலே அவரது சிறப்பு நூல் திருக்குறள் பற்றியும் அதிலடங்கி இருக்கின்ற நீதிக் கருத்துக்கள் பற்றியும் மக்களுக்கு விளக்கிக் கூறி அதன்படி அன்போடும், அறிவோடும், ஒழுக்கத்தோடும் நடந்துக்கொள்ளத் தூண்டுவதே நல்லதாகும், சிறப்புப், நெறியும், பெருமையுமாகும்." இவ்வாறு இரத்தினபுரி ஸ்ரீ சுமன வித்தியாலயத்தில் தமிழ் மன்றத் தலைவர் செல்வன் இரா. இராஜ் தலைமையில் நடைப்பெற்ற வள்ளுவர் வழாவில் கருத்துரை வழங்கிய திரு. டி. எம். பீர்முகமது கூறினார். ஆசிரியர் திரு. அ. பிலிப் சொற்பொழிவாளர்களை அவையோர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்து உரை ஆற்றினார். திரு. கே. எம். தியாகராஜா பேசுகையில் வள்ளுவர் விழா நடத்துவதினாலோ, திருக்குறளை மனனம் செய்வதினாலோ எவ்விதப் பயனும் ஏற்படப் போவதில்லை என்றும், வள்ளுவர் வகுத்த வழிகளில் செல்வதே நாம் வள்ளுவருக்குச் செலுத்தும் மரியாதையாகும் என்றார். திரு. பீர்முகமது தொடர்ந்து பேசுகையில்:-

"வள்ளுவருக்கு விழாக் கொண்டாடி வருவதனால் மாத்திரம் நாம் வாழ்ந்து விட முடியாது அவர் கண்ட ஒழுக்கம், கல்வி, கற்புடைமை, சொல், செயல் அத்தனையும் நாம் பின்பற்ற முயல வேண்டும். குறள் நெறி நடப்பவன் இந்தக் குவலயத்தில் உயர்ந்தவன் என்று எண்ணம் நமக்கு ஏற்பட வேண்டும். இந்த ஆண்டு வள்ளுவர் தினத்தில் இருந்தாவது அன்புடனும் அறிவுடனும, நடந்து அநீதி அக்கிரமங்களை மறந்து பிறருக்கு வழிகாட்டியாக இருப்பேன் என்று ஒவ்வொருவரும் சபதம் ஏற்றுக் கொண்டால் அதுவே ஒரு பெரும் வெற்றியாகும்.''

கூட்டம் துவங்கும் பொழுது மறைந்த மாவார் தொழிலாளர் தலைவர் திரு. கே. ஜி. எஸ். நாயர் அவர்கட்கு மரியாதை செலுத்தும் வண்ணம் எல்லோரும் இரண்டு நிமிட நேரம் எழுந்து நின்று மௌனம் சாதித்தனர். செல்வன் இராசரட்ணம் தமிழ்மொழி வாழ்த்துப் பாடினார். செல்வன் வீரையா நன்றி நவின்றார்; செல்வன் மு. சிவனடியானும் பேசினார்.

—

### நுவரெலியா தமிழ் மாணவ மன்றம்

"உலகில் எத்தனையோ மொழிகளில் எத்தனையோ நூல்கள் தோன்றியுள்ளன. ஆனால் அவைகளுக்கெல்லாம் இன்று விழா எடுக்கவில்லை. தமிழ்ப் புலவர் ஒருவர் யாத்த திருக்குறள் ஒன்றுக்குத்தான் இன்றும் விழா எடுக்கிறார்கள், மற்ற மொழி இலக்கியங்கள்யாவும் இன்று வாழ்ந்தாலுங் கூட திருக்குறள் போன்று உலகப் பொதுமை பெறவில்லை.'' இவ்வாறு நுவரெலியா புனித சவேரியார் கல்லூரி தமிழ் மாணவர் மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற வள்ளுவர் விழாவில் பேசிய கற்றன் கைலன்ட் கல்லூரி உப அதிபரான திரு. இரா. சிவலிங்கம் எம். ஏ. டிப்ளோமா அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார்.

இவ்விழாவுக்கு நுவரெலியா வட்டார வித்தியாதரிசியான திரு. குணரெட்ணம் அவர்கள் தலைமை வகித்தார். வித்தியாதிகாரியவர்கள் பேச்சுப் போட்டி சங்கீதப் போட்டிகளில் பரிசு பெற்றோருக்குப் பரிசில்களை வழங்கினார்.

ஆசிரியர் எம். ஞானப்பிரகாசம், எஸ். எம். யோசெவ் ஆகியோரும் உரையாற்றினர். ஆசிரியர் எஸ். அமிர்தநாதர் நன்றி நவின்றார். மாணவர் மன்ற உறுப்பினரால் 'மலைக் கோட்டை மாளிகை'' எனும் நாடகமும் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

—

### அநுராதபுரம் தமிழ்க் கழகம்

அநுராதபுரம் தமிழ்க் கழகத்தார் திருவள்ளுவருக்கு விழா எடுத்தனர். திருக்குறளை சிங்களத்தில் மொழிபெயர்த்த திருமதி மிஸிஹாமி அம்மையாருக்கு பாராட்டுக்கள் வழங்கப்பட்டன. கலாச்சார அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா இவ் விழாவில் பங்கு பற்றினார். அவர் தமிழில் உரை நிகழ்த்தும் போது சிங்களவர்கள் தமிழைக் கற்று தமிழின் சிறப்பை உணர வேண்டுமெனவும், அதே நேரத்தில் சிங்கள மொழியையும் தமிழர்கள் கற்க வேண்டுமெனவும் கூறுனார்.

கூட்டத்திற்கு திரு. ரே. ஸ்ரனிஸ்லோஸ் தலைமை வகித்தார். திருமதி மிஸிஹாமிக்கு, திருமதி சிற்றம்பலம் பொற் பதக்கம் வளங்கினார். பண்டிதர் எம் சின்னத்தம்பி, அவர்களும் பேசினார்.

அனுராதபுரம் விவேகானந்த வித்தியாலய மாணவிகள் மொழி வாழ்த்துப் பாடினர். இசை மணி பொ. கந்தசாமிப்பிள்ளை, திரு. த. இராசையா ஆகியோர் இசை விருந்தளித்தனர்.

செல்வி விமலா முதங் [illegible] நடன விருந்தும் நடைபெற்றது.

—

### விருதுநகர் நகரசபை உதவித் தலைவருக்கு வரவேற்பு

அருந்ததியர் சங்கத்தின் சார்பில், விருதுநகர் நகரசபைத் தலைவர் என். கந்தசாமி, அவர்களுக்கு 26-5-62-ல் சங்க உப தலைவர் திரு. அ. பி. சுந்தரராஜ் அவர்கள் தலைமையில் வரவேற்புபசாரம் நடைபெற்றது.

திருவாளர்கள். மா. பெ. பாரதி, சங்கத் தலைவர் மூ. வேலாயுதம், அ. பொன்னையா, சங்கப் பொதுச் செயலாளர் கு. மூ. இராசு, உப செயலாளர் மா. சே. அருள், எஸ். போல் ஆகியோர்கள் அன்னார் அவர்களின் சமூகப் பணியைப் பாராட்டிப் பேசினர்.

கூட்டத்துக்கு நன்றி தெரிவித்து பேசுகையில் உதவி தலைவர் அவர்கள் கூறியதாவது: சங்கம் அமைத்து நாம் செயலாற்றினாலன்றி நமது சமூகம் பின்னடைந்து கொண்டே போகும் எமது சமூகம் ஸ்தாபனரீதியில் உழைப்பது அவசியம். தமிழ் நாட்டில் பத்து வருடங்கட்கு முன்பிருந்ததிலும் இப்போது அருந்ததியர் சமூகத்தின் நிலை சற்று உயர்ந்துள்ளது என்பதை பெருமையாக கூறிக்கொள்ளுவதில் மகிழ்ச்சியடைகிறேன். என்று கூறினார்.

பின்பு கிளைச் சங்கங்கள் சார்பாகவும், மத்திய சங்க சார்பிலும், தனிப்பட்ட நபர்கள் சார்பாகவும் மாலைகளும் பரிசுகளும் உதவி தலைவர் அவர்கட்கு வழங்கிய பின் சங்க உப செயலாளர் திரு. நெ. கா. சிவஞானம் அவர்களின் நன்றியுரையோடு கூட்டம் இனிது முடிவுற்றது.

—

### ஜன சமூக நிலைய பொதுக் கூட்டம்

ஜமாலியா ஜன சமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் ஜனாப் ஏ. மீரா மொகிதீன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவரின் ஆரம்ப உரை முடிந்ததும் சென்ற வருட அறிக்கைகளும் கணக்குகளும் காரியதரிசியால் சமர்ப்பிக்கப்பட்டு சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின் நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ஜனாப் ஏ. மீரா மொகிதீன், உப தலைவர் ஜனாப் எம். எம். கனி, காரியதரிசி ஜனாப் என்.ஏ.ஏ.காதர், உப காரியதரிசி ஜனாப் எம். ஐ. காதர் தம்பி, தனாதிகாரி ஜனாப் எம். எஸ். ரெசாக், ஜனாப் எஸ். எம். ராசா ஆகியோருடன் ஐவரைக் கொண்ட ஒரு நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்ட பின் பாத்திகாவுடன் கூட்டம் கலைந்தது.

—

### இலங்கைத் தி. மு. க. கிளை நிர்வாகிகள் தேர்வு

**புதுக்காடு:**

புதுக்காடு தோட்ட இ. தி. மு. க. கிளை நிர்வாகிகள் தேர்வு நாவல் நகர் மாவட்டக் கிளை செயலாளர் தோழர் மு. இரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

செயலாளர்: பா. முருகையா, துணைச் செயலாளர்: செ. பெரியசாமி, பொருளாளர்: அ. செல்லையா, தொண்டர் தலைவர்: கருப்பையா, வரவேற்புக் குழு உறுப்பினர்: பா. முருகையா.

**நாவல்நகர்:**

நாவல்நகர் மாவட்டக் கிளையின் வட்டக் கிளை பொறுப்பாளர்கள் தேர்வு 24-5-62-ல் நாவல்நகர் மாவட்டக் கிளை பணிமனையில் மாவட்டக் கிளை செயலாளர் தோழர் மு. இரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்டவர்கள் வட்டக் கிளை பொறுப்பாளர்களாக நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

கினிகத்தேனை:- தோழர். அன்பழகன், வட்டவளை:- தோழர். எச். ஏ. காதர், நோட்டன்;- தோழர். பொ. பெரியசாமி.

**மவ்ன்சின்:**

மவ்ன்சின் தோட்ட இ. தி. மு. க. கிளை நிர்வாகிகள் தேர்வு 24-5-62-ல் நடைபெற்றது. நாவல்நகர் மாவட்டக்கிளை செயலாளர் மு. இரட்ணம் முன்னுரைக்குப் பின் கீழ்க் கண்டவர்கள் நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

செயலாளர்: கே. ஓ. காளிமுத்து, துணைச் செயலாளர்: பி. அழகேசன், பொருளாளர்: கே. சின்னக்கண்ணு, தொண்டர் தலைவர்: கே. என் கோவிந்தசாமி துணைத் தொண்டர் தலைவர்: என். பி. நல்லதம்பி, வரவேற்புக் குழு உறுப்பினர்: வி. எம். அழகன்.


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

எல்பின்ஸ்டன் (மருதானை) | ரெக்ஸி (வெள்ளவத்தை)



மற்றும் 6 திரைகளில்
பிரேம் நஸீர்,
எம். என். ராஜம்,
ராஜகோபால்,
ஸ்ரீ ரஞ்சனி,
தாம்பரம் லலிதா,
வி. கே. ராமசாமி,
டி. பாலசுப்பிரமணியம்
மற்றும் பலர் நடித்த



# ★ திலகம் ★

(ஹெலனின் நடனத்தைக் கலரில் கண்டு ஆனந்தியுங்கள்)

---

## 2-வது வாரம்!

**சென்ட்ரல் (மருதானை)**

2-30, 6-15, 9-30க்கு
ஞாயிறு காலை 10-00க்கு

* ராஜ் கபூர்
* பத்மினி
* நந்தா
* அபி
* ஹனி இரானி

நடித்த

# ஆஷிக்

(சிறந்த ஹிந்தி படம்)



கண்கவர் நடனங்கள்!
காதிற்கினிய பாடல்கள்
நிறைந்த படம்!

# ஆஷிக்

உங்கள் மனதைவிட்டு அகலாத
படம் "ஆஷிக்"!
சிறந்த பாடல்கள் நிறைந்த
படம் "ஆஷிக்"!

அன்பு, நேர்மை, தன்னம்பிக்கை
இவைகள் எப்பொழுதும்
வெற்றி பெற்றே தீரும் என்பதற்கு
எடுத்துக்காட்டு.

# "ஆஷிக்"

டைரக்ஷன்:
**முக்கர்ஜி**

இசையமைப்பு:
**ஷங்கர்-ஜய்கிஷன்**

பின்னணி:
**முகேஷ்-லதா**

---

## 9-வது மங்களகரமான வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | ராஜ் (நீர்கொழும்பு)

மற்றும் 11 திரைகளில்

பார்த்தோர் பரவசப் படுகிறார்கள்

பார்க்காதவர்கள் இன்றே பார்த்து மகிழுங்கள்.

சரோஜா தேவி
சிவாஜி கணேசன்
எம். ஆர். ராதா
சௌகார் ஜானகி
மற்றும் பலர் நடித்த



# பாலும் பழமும்

டைரக்ஷன்:
ஏ. பீம்சிங்

---

## வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

சினிமாஸ் திரைகளில்



இலட்சிய நடிகர்
எஸ். எஸ். ராஜேந்திரன் M. L. A.
இலட்சிய நடிகை
விஜயகுமாரி
நடிகவேள்
எம். ஆர். ராதா
முதலியோர் நடித்த
மாடர்ன் தியேட்டர்ஸ்

# குமுதம்

இசை:
கே. வி. மகாதேவன்

டைரக்ஷன்:
ஏ. சுப்புராவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் ஜூன் மாதம் 10-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.